ශ්‍රී ලංකා රූපවාහිනී සංස්ථාව

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

Sri Lanka Rupavahini Corporation

P.O. Box : 2204, Independence Square, Colombo 07, Sri Lanka

Telephone : 011 250 1050 / 011 259 9505

Fax : 011 258 0131

E - Mail : chmn@rupavahini.lk

Website : www.rupavahini.lk

கௌரவ வெகுசன ஊடக அமைச்சர் அவர்களுக்கு,

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களாகிய நாம் 1971ஆம் ஆண்டு38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(1) பந்தியின் கீழ் 2021ஆம் வருடத்திற்கான ஆண்டிறிக்கையை இத்துடன் முன் வைக்கின்றேன்.

கணக்கு அறிக்கையும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்காக

ரெஜினோல்ட் குரே
தலைவர்
இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

நோக்கு

இலங்கையில் இலத்திரனியல் ஊடகத்துறையின் முன்னோடி

பணிகள்

அறிவு, பொழுதுபோக்கு,கல்வி நடப்பு விவகார முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளை அர்ப்பணிப்புடன் ஒற்றுமையாகத் தயாரித்து, புதிய தொழில்நுட்பத்துடன் நான்கு திசைகளிலும் உள்ள இலங்கையர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் ஒளிபரப்புதல்.

.

குறிக்கோள்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அடிப்படை மாதிரிகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் கண்கவரும் தன்மை மற்றும் அவற்றின் அர்த்தமுள்ள தன்மையை மேம்படுத்துதல்.

புதிய தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி ரசிகர்கள் மத்தியில் இலகுவாக சென்றடைதல்.

நிறுவனத்தின் பௌதீக மற்றும் மனிதவளங்களை பயனுள்ள வகையில் திறன்பட மேம்படுத்தல்.

நிறுவனத்திற்கு மேலதிக வருமானம் ஈட்டித் தரும் வழிவகைகளை அறிமுகப்படுத்தல்.

போட்டித் தன்மைக்கு ஏற்ற வகையில் நிறுவனத்தின் சட்டரீதியான கட்டமைப்பினை மாற்றியமைத்தல்.

உள்ளடக்கம்

தலைவரிடமிருந்து	05
கூட்டுத்தாபன பணிப்பாளர்சபை	06
சிரேஷ்ட முகாமைத்துவம்	07
விருதுகளுக்கான வெற்றிகள்	08
நிகழ்ச்சிப் பிரிவு	10
கல்வி நிகழ்ச்சிப் பிரிவு	23
செய்திகள் மற்றும் நடப்பு விவகாரப் பிரிவு	32
தயாரிப்பு சேவைகள் பிரிவு	40
பொறியியல் பிரிவு	49
சந்தைப்படுத்தல் பிரிவு	63
நிருவாகப் பிரிவு	70
நிதிப் பிரிவு	95
பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று	97
நிதி அறிக்கை	99
கணக்காய்வு அறிக்கை	164

தலைவரிடமிருந்து



இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் 2021ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை முன்வைப்பதில் அதன் தலைவர் என்ற வகையில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நிலவும் கோவிட் தொற்று காரணமாக இலங்கை சமூகம் பல்வேறு சவால்களை எதிர்நோக்கியுள்ளனர். அந்த சவால்களினூடே இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு நாளாந்த நடவடிக்கைகளை உரியவாறு நடாத்திச் செல்வதற்கு இயலுமானது நாம் பெற்ற விசேட வெற்றியாகும்.

தொலைக்காட்சி அலைவரிசைகளை தரப்படுத்துவதற்காக வேண்டி தற்காலத்தில் பாரிய போட்டி நிலை காணப்படுகின்றது. அவ்வாறான போட்டி நிலைமைக்கு முகங்கொடுத்து இலங்கையின் கலாசாரத்தையும் தேசிய தனித்துவத்தையும் பாதுகாக்கும் வன்னம் தேசிய தொலைக்காட்சியை செயற்படுத்துவது மிகவும் சவாலான செயற்பாடாகும்.

இந்த சவால்களை வெற்றி கொள்வதற்காக எனது நோக்குடன் ஒன்றிணைந்த கூட்டுத்தாபனத்தின் பணிக்குழுவிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளவதற்கான சந்தர்ப்பமாக நான் இதனை கருதுகின்றேன். அவர்களது அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்பு இல்லாமல் போயிருந்தால் இந்த விடயத்தினை வெற்றி கொள்ள முடியாது என்பது தெட்டத் தெளிவாகின்றது.

தேசிய தொலைக்காட்சியிடமுள்ள விசேட தனித்துவத்தினை பாதுகாத்து பார்வையாளர்களின் இரசணையினை அதிகரிக்கச் செய்து ஊடகத்துறையில் நிலைத்திருப்பதே எமது ஒருமனதான நோக்காகும்.

ரெஜினோல்ட் குரே
தலைவர்
இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை

கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை 2021 ஜூலை மாதம் செய்ய

1. வைத்தியர் நிஹால் ஜயதிலக்க -தலைவர் - (இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்)
2. திரு. பிரசன்ன ஹென்னாயக்க - கைதேர்ந்த ஒளிப்பதிவாளர்
3. திரு. இந்திக்க லியனஹேவகே - தலைமை நிர்வாக அதிகாரி
4. திரு. இந்திக்க ஜயரத்ன - இயக்குனர் - (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்)
5. திரு. மஞ்சுள மாக்கும்புர- வழக்கறிஞர்
6. திரு. ஜயந்த தர்மதாச- தலைவர் (தேசிய திரைப்படக் கழகம்)
7. திருமதி. பி.கே.எஸ். சுபோதினி - கல்வி அமைச்சின் பிரதிநிதி
8. திரு. எச்.எச். கஸ்துரியாரச்சி - கருவூல முகவர்
9. திரு. எஸ்.ஆர்.டப்.எம்.ஆர்.பி. சத்குமார - ஊடக அமைச்சின் பிரதிநிதி

கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை 2021 ஜூலை மாதம் இருந்து

1. திரு. ரெஜினோல்ட் குரே - (தலைவர்) (இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்)
2. திரு. ஜயந்த தர்மதாச- தலைவர் (தேசிய திரைப்படக் கழகம்)
3. திரு. பேராசிரியர்அஜித் திசாநாயக்க - களனி பல்கலைக்கழகம்
4. திரு. சொனால குணவர்தன - இயக்குநர்கள் குழுக்கள் உறுப்பினர்
5. திரு. நுவன் கமகே - இயக்குநர்கள் குழுக்கள் உறுப்பினர்
6. திருமதி பி.கே.எஸ். சுபோதினி - கல்வி அமைச்சின் பிரதிநிதி
7. திரு. சந்திரபால லியனகே - பணிப்பாளர் நாயகம் - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
8. திரு. எச்.எச். கஸ்துரிஆரச்சி (திரைசேறிப் பிரதிநிதி)
9. திரு. எஸ்.ஆர்.டப்ளியு.எம்.ஆர்.பி. சத்குமார- (ஊடக அமைச்சின் பிரதிநிதி)

2021ஆம் வருடத்திற்கான சிரேஷ்ட முகாமைத்துவம்

01. தலைவர் - வைத்தியர் நிஹால் ஜயதிலக்க(2021.05.11 வரை)

- திரு. ரெஜினோல்ட் குரே (2021.05.19 முதல்)

02. பணிப்பாளர் நாயகம் - திரு. அஜித் குணரத்ன நாரகல (2021.06.30வரை)

- திரு. ஜயம்பதி பண்டார ஹீன்கெந்த (2021.07.01)

03. பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொறியியல்) - திரு. பாலித்த கால்லகே (2021.11.08 வரை)

பி.பணிப்பாளர் நாயகம் (பொறியியல்)(பதில்) - திரு. டி.எம்.கே. தசநாயக்க (2021.12.09 முதல்)

04. பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிருவாகம்) - திருமதி. பி.ஜீ.ஆர். ஹேமந்தி குமாரி (2021.12.21 வரை)

05. பிர.ப. நாயகம் (நிருவாகம்) (கடமை ஆவரணம்) – திரு. சுனில் திசாநாயக்க (2021.12.22 முதல்)

06. பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிகழ்ச்சி) - திரு. சுமேத அத்துலசிரி

07. பணிப்பாளர் (தயாரிப்பு சேவை) - திரு. பாலித்த கே. விஜேசிங்க

08. பிரதான பொறியிலாளர் - திரு. டீ.எம்.கே. தஸநாயக்க

- திரு. பீ.எஸ்.பி. பெரேரா

09. பணிப்பாளர் (கல்வி நிகழ்ச்சிகள்) - திருமதி. எரின் விஜேகோன் (2021.11.21 வரை)

10. பணிப்பாளர் (கல்வி நிகழ்ச்சிகள்) பதில் - திரு. ரி.எம்.சந்திரசிரி (2021.11.23 முதல்)

11. பிரதான கணக்காளர் - திருமதி. ஏ.எச்.ஈ.ஆர்.பி. எதிரிசிங்க

12. பணிப்பாளர் (பல்வேறு நிகழ்ச்சிகள்) - திரு. விஜய திசாநாயக்க

13. பணிப்பாளர் (நிருவாகம்) பதில் - திரு. சுனில் திசாநாயக்க

14. பணிப்பாளர்-செய்தி மற்றும் நடப்பு விவகாரம (பதில்)- திரு. இந்திக்க மாரசிங்க

விருதுகளுக்கான வெற்றிகள்

விருதுகள்	விருது விழா	நிகழ்ச்சி	தயாரிப்பு
சிறந்த ஓரங்க தொலைக்காட்சி நாடகம்	அரச விருது விழா – 2020	உட்டங்குவ	
சிறந்த சிறுவர் நிகழ்ச்சி	அரச விருது விழா – 2020		
சிறந்த நேரடி ஒளிபரப்பு	அரச விருது விழா – 2020		
சிறந்த தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி	ரைகம் தொலைக்காட்சி விருது – 2021	ரட்டா	விராஜ் தர்மசேன
ஜூரியின் விசேட மதிப்பீட்டு விருது	ரைகம் தொலைக்காட்சி விருது – 2021	சுவஹசக் விளக்கேற்றிய லக்சபான அறிக்கை நிகழ்ச்சி	
சிறந்த செய்தி அறிவிப்பாளர்	அரச விருது விழா – 2021	தமிழ் செய்தி	இர்ஷாட் ஏ. காதர்
சிறந்த செய்தி அறிவிப்பாளர்	ரைகம் தொலைக்காட்சி விருது – 2021	தமிழ் செய்தி	ராதிகா வின்சன்ட்
வருடத்தின் சிறந்த கல்வி நிகழ்ச்சி		தேசிய பாடசாலை (சிங்களம்)	சுனேத்ரா குமாரி
ஜூரியின் விசேட விருது	அரச விருது – 2020	அசிரிமத் ஹோட்டன் தென்ன	பூஜித திசாநாயக்க
வருடத்தின் சிறந்த அறிக்கை நிகழ்ச்சி	சுமதி விருது – 2020	அசிரிமத் ஹோட்டன் தென்ன	பூஜித திசாநாயக்க
வருடத்தின் சிறந்த அறிக்கை நிகழ்ச்சி	அரச விருது– 2020	வுல்ப் நொந்துட்டு பந்தேகம	நாமல் பிரசன்ன
ஜூரியின் விசேட மதிப்பீடு	ரைகம் தொலைக்காட்சி விருது - 2020	வெவக் வகே கதக்	சந்தியா விந்தான வசம்

பரிந்துரைக்கப்பட்டவைகள்

பின்னணிக் குரல் அலகு

- சிறந்த சிறுவர் நிகழ்ச்சி – ரைகம் விருது விழா 2020
- சிறந்த சிறுவர் நிகழ்ச்சி – சுமதி விருது விழா 2020
- சிறந்த உரையாடல் வழங்கிய நிகழ்ச்சி – ரைகம் விருது விழா 2020
- சிறந்த உரையாடல் வழங்கிய நிகழ்ச்சி – அரச விருது விழா 2020

வெளிநாட்டு விருது – பங்கேற்பு மதிப்பீடு

- Prix Jenunesse Internation Foundation – Germany 2020

இசைப் பிரிவு

- ஜயமினி இலேப்பெருமை – சிஹினயக்கி ரே (அரச விருது)
- ஜனமினி இலேப்பேரும – பலன் கடதுரா ஹெர தெச (அரச விருது)

கல்விப் பிரிவு அலகு

- ரைகம் விருது விழாவில் சிறந்த நிகழ்ச்சிக்கான பரிந்துரை (சுக்கானம்)
- ரிவிதின அருணெல்ல – பரிந்துரைக்கபட்ட பெயர் (சிறந்த கல்வி நிகழ்ச்சி)

செய்திப் பிரிவு

- திருமதி. நிசாதி ருவன்மலி – தயாரிப்பாளர் Promting the vlue of volunteerism in Sri Lanka. (Documenttary on 'Grandma Who Leads the Way) Recognized at the UNV 50 Country Awards inSri Lanka 2021
- Prix JEUNESSE INTERNATIONAL MUNICHசர்வதேச விருது விழாவில் போட்டிப் பிரிவில் இறுதிச் சுற்றுக்காக தயாரிப்பாளர் திருமதி நிசாதி ருவன்மலியின் 'Grandma Who Leads the Way)நிகழ்ச்சி பரிந்துரைக்கப்பட்டது.
- 2021 ரைகம் விருது விழாவில் சிறந்த தமிழ் செய்தி அறிவிப்பாளராக இர்சாட் ஏ காதர், ஜே. அபினந்தன் மற்றும் ராதிகா வின்சன் ஆகிய மூவரும் எமது அலைவரிசையில் பரிந்துரைக்கப்பட்டிருந்தமை விசேட அம்சமாகும்.
- ஆசிய சமுத்திரத்தின் ஒலிபரப்பு சங்கத்தின் ஏசியா விசன் செய்தி அலைவரிசையில் 35 நாடுகளிடையே இடம்பெற்ற 2021 ஏசியா விசன் வருடாந்த விருது விழாவில் தேசிய தொலைக்காட்சி முன்வைக்கப்பட்டிருந்த 2020 பொதுத் தேர்தல் செய்தி தொகுப்பு – சிறந்த திட்டமிடல் செய்திக்கான விருதிற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தமை.
- அந்த விழாவில் பொலன்னறுவை வாவியில் விழுந்த யானையொன்றினை கரைசேர்ப்பது தொடர்பான செய்தி சிறந்த குறிப்புச் செய்திக்கான (Light Item)விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டது.

நிகழ்ச்சிப் பிரிவு

நாடகப்பிரிவு

நாடகப் பிரிவின் நோக்கம்

- நாளாந்தம் ஒளிரப்பப் படுகின்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிடையே பிரபல்யமான பகுதியொன்றாகக் காணப்படுகின்ற தொலைக்காட்சி நாடகத் துறையில் முன்னோடியாக, தொலைக்காட்சி நாடகத் துறையில் தரங்களைப் பேணி நேயர்களின் இரசனையினை அதிகரிப்பதனை நோக்காய்க் கொண்டு உயர்ரக ஓரங்க மற்றும் மேடை தொலைக்காட்சி நாடகங்களை தயாரித்தல். இத்துறைக்கு இயன்றளவு புதிய படைப்புக்களை அறிமுகப்படுத்தல் மற்றும் புதிய கலைஞர்களை அறிமுகப்படுத்தல் (எழுத்தாளர்கள், நடிகர்கள் மற்றும் இசையமைப்பாளர்கள் போன்றோர்)
- தொலைக்காட்சி நாடகக் கலைக்கு பாத்திரமாக அமைந்த துறையான மேடை நாடகங்கள், சினிமா என்ற ஊடகத் துறைக்கு சமனாக முன்னேற்றுவதற்காக உறுதுணையாய் இருத்தல். (சர்வதேச ஊடக வளர்ச்சி)
- எதிர்காலத்தில் தொலைக்காட்சி நாடகத் துறை சர்வதேச தலத்திற்கு எடுத்துச் செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தல்
- அரச நாடக விழா, அரச சினிமா விழா, அரச கலாசார விழா, தேசிய விழா நேரடி ஒளிபரப்பு மற்றும் வேறு கலை நிகழ்ச்சிகளின் ஒளிபரப்புடன் தேசிய தரத்திலான சேவைகளை நிறைவேற்றுதல்.
- ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் இணைந்து கொள்கின்ற புதிய கலைஞர்கள் மற்றும் ஊடகத்துறையில் அறிமுகமாவதற்கு ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் பயிற்சி மற்றும் வழிகாட்டுதல்களை எதிர்பார்க்கின்ற கலைஞர்களை பயிற்றுவித்தல்.
- மூத்த கலைஞர்களுக்காக உபகாரநிகழ்ச்சிகளை தயாரித்தல்.
- தொலைக்காட்சி நேயர்களை தொலைக்காட்சி நாடகங்களைப் பார்வையிடுவதினூடாக இன்பமடையச் செய்தல்.

2021 ஆண்டினுள் விசேடமாக இடம்பெற்ற அலுவல்கள் மற்றும் திட்டங்கள்

- ‘‘சித நிவன கதா’’ நோன்மதி தின ஓரங்க நாடகங்கள் 03 தயாரித்து ஒளிபரப்புதல்.
- எல்காலே, கிரிபத் புதுவருட ஓரங்க தொலைக்காட்சி நாடகங்கள் தயாரித்து ஒளிபரப்புதல்
- காலபாசன நிகழ்ச்சி 12 அனைத்துச் சனிக்கிழமைகளிலும் நேரடி ஒளிபரப்புச் செய்தல்
- ‘‘வாசுலிய’’ நிகழ்ச்சிகள் 25ஐத் தயாரித்து ஒளிபரப்புதல்
- வெஸ்ஸகிரி நிகழ்ச்சி 12 தயாரித்து ஒளிபரப்புதல்
- ‘‘அபே சிந்துவ’’01 நிகழ்ச்சிகள் தயாரித்து ஒளிபரப்புதல்
- விருது விழா நிகழ்ச்சி 01 தயாரித்து ஒளிபரப்புதல்

- சிங்கள புத்தாண்டு நிகழ்ச்சி நேரடி ஒளிபரப்பு
- "ரங்க பூமி" நிகழ்ச்சிகள் 12ஐத் தயாரித்தல்
- "ஞாயிறு ஆயுபோவன்"நிகழ்ச்சிகள03 நேரடி ஒளிரப்பபு

குரல்பதிவு பிரிவு

வெளிநாட்டு, உள்நாட்டு நிகழ்ச்சிகளை குரல்பதிவு செய்தல், உப தலைப்பிடல் உள்நாட்டு நேரடி தயாரிப்புக்கள் மற்றும் உள்நாட்டு சிறுவர் நிகழ்ச்சிகள் தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொளளும் பிரிவாகும்.

குரல் பதிவுப் பிரிவு குரல் பதிவு அறை 03, உப தலைப்பிடல் பிரிவு மற்றும் நேரடி ஒளிபரப்பு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

இப்பிரிவின் சேவையாளர்களின் எண்ணிக்கை 17 ஆகும்.

பிரதிப் பணிப்பாளர்	-01
பிரதித் தயாரிப்பாளர்	-01
தயாரிப்பாளர்	-01
உதவித் தயாரிப்பாளர்	-06
ஆசிரியர்	-04
புகைப்படவியலாளர், நேரடி ஒளிபரப்பாளர்	-02
குரல்பதிவு மற்றும் உபதலைப்பு பரதி உதவியாளர்	-01

தயாரிக்கப்பட்ட புதிய நிகழ்ச்சிகள்

குரல்பதிவு செய்த நிகழ்ச்சிகள்

சசர சின்னராவி Ep 40-64 (30mts x 25)

சவிமத் அத்வெல் (126 mts x 01)

சித்தரா (126 mts x 01)

Ryota S Summer

S mdang (60 mts x 05) (குரல் பதிவு செய்யப்படுகிறது.)

உபதலைப்புக்கள் இடப்பட்ட நிகழ்ச்சிகள்

A Changso (112 mts x 01)

Shadow (117 x 01)

Operation Red Sea (140 mts x 01)

Kill Mobile (101 mts x 01)

Biginning of the Great Revivial (126 mts x 01)

Window (86 mts x 01)

Boluga (81 mts x 01)

Nil Battery Santa

S. Bahadur

Balmaca Kulesi

சிறுவர் நிகழ்ச்சிகள்

Emmy Yammy Ep 19-68 (45 mts x 50)

நேரடி ஒளிபரப்பு

Mr. Fox Ep 01-05
Covid 19 அறிவூட்டும் ட்ரய்லர் Ep 01-05

காபன் உரம் வளர்ச்சி ட்ரய்லர்

- **வேறு நிகழ்ச்சிகள்**

ஆங்கில உபதலைப்பிடப்பட்டவைகள்

1. Colour of Friendship (25 mts x 01)
2. இரி நெலுனு மினிஸ் மல்
3. Sri Pop (120 mts x 01)
4. ரங்க பூமி (10 mts x 01)
5. Ru Edu (10 mts x 01)
6. Mrlody of Other Na

மீள் ஒளிபரப்புச் செய்யவதற்காக தயாரிக்கப்பட்ட மற்றும் பாதுகாக்கப்பட்ட நிகழ்ச்சிகள்

- Lost Ledgend (30mts x26)
- Bay City (30 mts x 13)
- மஹாவுல காபாசீனியாதுமா
- வூல காபாசீனியதுமா
- Gost writer (30 mts x 26)
- Robin Hood – BBC (30mts x 26)
- Sherlock Hound (30mts x 20)
- Robin Hood - BBC (30mts x 78)
- Space Cases (30mts x 26)
- The Odyssey (77mts x 02)
- Silver Sun (30mts x 40)
- Cleopatra (84mts x 02)
- Man to Man (113mts x 01)
- Arabin Night (74mts x 02)
- Teenge Mutant Ninja (84mts x 01)
- ஜப்பானின் கதை
- Sea Quest (30mts x 46)
- பஞ்சதந்திரம்
- Sectret Island (30mts x 20)
- Water Margin (45mts x 43)
- Prison Break (45mts x 67)
- Tom & Zena (30mts x 26)
- Mission of Love (30mts x 26)

- Wuthering hights (120mts x 01)
- Tin Man (45mts x 05)
- Enpire (46 mts x 05)
- Gleopatra (45 mts x 05)

2021ஆம் ஆண்டில் சமூக சேவை நிகழ்ச்சிகள்

கோவிட் 19 தொடர்பான சமுகத்தினை தெளிவு படுத்தும் விளம்பரங்கள் பல தயாரித்தல். காபன் உரத்தின் தேவைப்பாடு மற்றும் அதன் முக்கியத்துவம் தொடர்பாக அறிவூட்டும் விளம்பரங்கள் தயாரித்தல்

கூட்டுத்தாபனத்தினை கட்டியெழுப்புவதற்காக ஒவ்வொரு பிரிவினாலும், நிறைவேற்றிய திட்ட நிகழ்ச்சிகளின் விபரம்

Rupavahini Animation Studio என்ற பெயரில் யு ரியுப் அலைவரிசையொன்றினை நடாத்திச் செல்லல் மற்றும் அதற்குரியதான நேரடி ஒளிபரப்புத் தயாரிப்புக்களை மேற்கொள்ளல்

இந்த யூ ரியுப் அலைவரிசையினால் மாதாந்தம் ரூபா. 75000 வருமானம் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குதல்

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினால் பராமரிக்கப்படுகின்ற சமூக இணையத் தளத்திற்குத் தேவையான படைப்புக்கள் மற்றும் தகவல்கள் வழங்குவதினூடாக தொலைக்காட்சியின் பெயரை வளர்ச்சிபெறச் செய்வதற்கு உதவுதல்.

பிரிவின் அலுவல் நடவடிக்கைகளை இலகு படுத்திக் கொள்வதற்காக சிறப்பியல்புகளை உயர்த்துவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட நன்மைகள்

குரல் பதிவுப் பிரிவு மூலம் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் பிரிவில் உள்ள வலையமைப்பு முறைமை மூலம் டிஜிடல் ஊடகத்தினூடாக ஒளிபரப்புச் செய்வதற்காக பிரதான கட்டுப்பாட்டு அறைக்கும் அந்த நிகழ்ச்சி வாசிகசாலைக்கும் இலகுவில் பெற்றுக் கொண்டு பாதுகாப்பதற்கு முடியுமானவாறு அமைத்தல் மற்றும் அவற்றினை புதுப்பித்தல், இதனூடாக கெசட் நடாவிற்கு பணத்தினை செலவு செய்யாமலும், நேர முகாமைத்துவத்தினையும் மேற்கொள்வதற்கான இயலுமை போன்றே தயாரிப்பு இலகுபடுத்துதற்கான இயலுமை பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்துள்ளது.

ஆவணங்கள் பரிமாற்றம் மேற்கொள்ள பிரிவிற்குள் வலையமைப்பு முறைமை ஏற்படுத்துவதனல் நேர முகாமைத்துவத்தினை போன்றே பணியாளர்களுக்கு வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

வள முகாமைத்துவ மற்றும் நிகழ்ச்சித் தயாரிப்புப் பிரிவு

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிப் பிரிவின் கீழ் வள முகாமைத்துவம் மற்றும் நிகழ்ச்சிகள் தயாரிப்புப் பிரிவில் நிலவுவதுடன் கூட்டுத்தாபனத்தின் ஒளிபரப்பான அன்றாட நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக முகாமைத்துவத்தின் ஆலோசனையின் பிரகாரம் விசேட திட்டங்கள் போன்றே கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகள் தயாரிப்பு இந்தப் பிரிவின் மூலம் இடம்பெறுகின்றன.

இந்தப் பிரிவு பிரதிப் பணிப்பாளரின் கீழ் நிர்வாகிக்கப்படுவதுடன், தயாரிப்பாளர்கள் இருவர்கள் மற்றும் பிரதி தயாரிப்பாளர் ஒருவர் மற்றும் தயாரிப்பு உதவியாளர் ஒருவர் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

2021ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகள்

- செல்லும் இடமெல்லாம் நிகழ்ச்சி – 10 நிகழ்ச்சிகள்
- மரணிக்காத மனிதர்கள்- 02 நிகழ்ச்சிகள்
- ஞாயிறு வணக்கம் - 02 நிகழ்ச்சிகள்
- திங்கள் நுகசெவன (2020 நவம்பர் மாதம் முதல் 2021 ஜூலை மாதம் வரை)
- வியாழன் நுகசெவன (2021 பெப்ரவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை)
- Forwad Forcus
- நவம் பெரஹர
- ரூ கிருல – 2021
- ஞாயிறு ஆயுபோவன்

சமய பிரிவு

பௌத்த சமய நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்களுக்கான நிகழச்சிகள் தயாரிப்பு இந்தப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு கடமையாற்றும் பணியாளர்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

பிரதிப் பணிப்பாளர்	-	01
சிரேஷ்ட தயாரிப்பாளர்	-	01
உதவித் தயாரிப்பாளர்	-	02
சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர்	-	01

அவ்வாறே சந்தர்ம வர்சா நிகழ்ச்சியுடன் இணைந்ததான அனைத்து நோன்மதி தினங்களிலும் சமூக உதவி நிகழ்ச்சிகள் மேற்கொள்ளல்.

இளைஞர் நிகழ்ச்சிப் பிரிவு

இளைஞர் நிகழ்ச்சிகள் பிரிவினால் 2021ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டன.

1. பைலா நிகழ்ச்சி - எல்லா ஞாயிறு மு.ப. 11.00-12.00
   ஞாயிறு ஆயுபோவன் 02ஆவது ஞாயிறு

2. லெசர் டைம் - எல்லா சனிக்கிழமைகளிலும் பி.ப. 14.00-15.00
3. Fashion எல்லா சனிக்கிழமை பி.ப. 16.30-15.00
4. சந்தகட – எல்லா நோன்மதி தினமும் பி.ப. 18.30-19.00
5. நுக செவன – எல்லா செவ்வாய்க்கிழமை மு.ப. 08.00-11.00
6. Vision எல்லா சனிக்கிழமையும் பி.ப 12.00-12.30

நிகழ்ச்சிகளை முன்வைக்கும் பிரிவு

மனோரி சமந்திகா ஜயதிலக்க உதவிப் பணிப்பாளராக கடமை புரியும் நிகழ்ச்சிகளை முன்வைக்கும் பிரிவின் அலுவலானது,ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் மூன்று அலைவரிசகளினதும் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பிற்காக நிரல்படுத்துவதாகும். போட்டி ரீதியான அலைவரிசைகளில் ஒளிபரப்பப்படுகின்ற நிகழ்ச்சிகள் தொடர்பான தெளிவுடன், குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் ஒன்றாக இருந்து பார்க்கக் கூடியவாறான சமனான நிகழ்ச்சிகைள மூன்று அலைவரிசைகளிலும் ஒளிபரப்பப்படுகின்றன. இவ் அலுவல்களை மேற்கொள்வதற்காக 15 உறுப்பினர்கள் அடங்களான அலுவலக பணியாளர்கள் இப்பிரிவில் கடமையாற்றுகின்றனர். நாளாந்த ஒளிபரப்பு நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக வேலை முறை சுழற்சி செயற்படுத்தப்படுகின்றது.

நிகழ்ச்சிகள் ஒளிபரப்பிற்காக பல படிமுறைகளில் நிரல்படுத்தப்படுகின்றது. முதலாவது உரிய நிகழ்ச்சி ஆவணப்படுத்தப்படும். நிகழ்ச்சித் திட்டக் கூட்டங்களின் போது ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகள், திகதி மற்றும் நேரம் தொடர்பான தீர்மானம் எடுக்கப்படும். அந்தத் தீர்வுகள் மற்றும் நிகழ்ச்சிகள் பிரிவுத் தலைவர்களுக்கு தெரியப்படுத்துவதற்கிணங்க மேற்சொன்னவாறு நிகழ்ச்சிகள் ஆவணப்படுத்தப்படும். இரண்டாவது திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி தயாரிப்பாளரினால் நிகழ்ச்சி தொடர்பான பத்திரம் ஒன்று நிகழ்ச்சிகள் முன்வைக்கும் பிரிவிற்கு வழங்கப்படும். இந்தப் பத்திரத்தில் நிகழ்ச்சியின் பெயர், ஒளிபரப்பாகும் காலம், ஒளிபரப்பாகும் திகதி, நேரம், ஒளிநாடா இலக்கம், நிகழ்ச்சியின் வகை மற்றும் தலைவர்களின் அங்கீகாரம் வழங்கிய ஒப்பமும் இதில் உள்ளடங்கும். இந்தத் தகவல்கள் கணினி மயப்படுத்தப்படும். பின்னர் தயாரிப்பாளரினால் நிகழ்ச்சிக்குரியதான ஒளிநாடா (கெசட்) நூலகத்திற்கு கையளிக்கப்படும். நிகழ்ச்சிகளை முன்வைக்கும் பிரிவின் அதிகாரிகள் அந்த

ஒளிநாடாவை (கெசட்) நூலகத்திலிருந்து பெற்றுக் கொண்டு ஒளிரப்பிற்காக வேண்டி பிரதான கட்டுப்பாட்டு அறைக்கு ஒப்படைத்து ஒளிபரப்பியதன் பின்னர் பிரதான கட்டுப்பாட்டு அறையிலிருந்து ஒளிநாடாவை (கெசட்) பெற்றுக் கொண்டு மீண்டும் நூலகத்திற்கு ஒப்படைப்பார்கள்.வெளியே இருந்து பெறப்படுகின்ற நிகழ்ச்சிகளின் ஒளிநாடாக்கள் (கெசட்) முழுமையாக கண்காணித்து விட்டு ஒளிபரப்பிற்காக பிரதான கட்டுப்பாட்டு அறைக்கு ஒப்படைக்கப்படும். இதற்கு மேலதிகமாக தலைவர், பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் ஆலோசனையின் பிரகாரம் நாளாந்த ஆவணத்திற்கு வெளியே, விசேடமான நிகழ்ச்சிகள் ஆவணப்படுத்தப்படுகின்றன. விநியோகப் பிரிவின் வேண்டுகோளுக்கு இணங்க அனுசரனையாளர்களுக்கு ஒளிக் காலத்தினை வழங்குவதுடன், தயாரிப்பாளர்களின் நிகழ்ச்சிகளின் இயங்கும் நேரம் குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் குறுகிய முன் விளம்பர காட்சிகளைப் பயன்படுத்தி அந்த ஒளிக் காலத்தினை சமப்படுத்தப்படுத்தலும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் நிகழ்ச்சிகளுக்காக நேரடி ஒளிபரப்பு நாடாக்களைத் தயாரிப்பதுடன், விசேட சந்தர்ப்பங்களின் போது முன் விளம்பர நாடாக்கள் தயாரிக்கப்படுகின்றன.

நிகழ்ச்சிகளை முன்வைக்கும் பிரிவு 1982ஆம் ஆண்டு வரை ஒளிபரப்பாகிய நிகழ்ச்சிகள் தொடர்பாக விபர ஆவணமொன்றினை நடைமுறைப்படுத்தி வருவதுடன்,ரூபவாஹினிக் கூட்டுத்தாபன நிகழ்ச்சிகள் தொடர்பாக வரலாற்றில் சாட்சியாகவும் இது அமைந்துள்ளது.

இசைப் பிரிவு

இலங்கை இசைத் துறையில் பல்வேறு வகையினர் பிரதிநிதித்துவப் படுகின்றவாறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரித்து ஒளிபரப்பப் படுவதினூடாக மக்களின் இரசனையை சிறப்பாக வழங்குவதே பிரதான நோக்கமாகும். உதவிப் பணிப்பாளர் ஒருவரின் கீழ் சிரேஷ்ட தயாரிப்பாளர்கள் இருவர் தயாரிப்பு உதவியாளர்கள் இருவருடன் அலுவலக உதவியாளர் ஒருவருடன் இப்பிரிவு செயற்படுகின்றது. தற்போது இசைப் பிரிவின் மூலம் தயாரிக்கப்படுகின்ற நிகழ்ச்சிகள்.

சிகினயகி ரே – ஞாயிறு இரவு 10.00 -12.30 உரியவாறு தொடர்ச்சியாக தயாரிக்கப்படுகின்ற நிகழ்ச்சியாகும்.

இதற்கு மேலதிகமகா திரு. பிரசன்ன ஹெட்டியாரச்சி (தயாரிப்பாளர்) 2022 புத்தாண்டினை முன்னிட்டு தயாரிப்பதற்கு எதிர்பார்க்கின்ற வலையமைப்பு நிகழ்ச்சிகக்கு தயாரிப்புப் பணிப்பாளராக கடமை புரிகிறார்.

விளையாட்டுப் பிரிவு

விளையாட்டுப் பிரிவானது நிகழ்ச்சிப் பிரிவிற்கு உரித்தானதொரு பிரிவாகும். அத்துடன், பணிப்பாளர் (விளையாட்டு), சிரேஷ்ட தயாரிப்பாளர், தயாரிப்பாளர், உதவித் தயாரிப்பாளர்கள் 4 பேர், தயாரிப்பு உதவியாளர் ஒருவர் சேவை வழங்கும் அடிப்படையில் சேவையாற்றுகின்ற தயாரிப்பு உதவியாளர், முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் அலுவலக சிற்றூழியர்கள் உள்ளடங்களாக 11 அதிகாரிகள் கடமையாற்றுகின்றார்கள். மேலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விளையாட்டுப் போட்டிகளை தொகுத்து வழங்குகின்ற பல்வேறு விளையாட்டுத் தகவல்கள் தொடர்பான நடவடிக்கைகள் விளையாட்டுப் பிரிவினூடாக இடம்பெறுகின்றன.

மேலும், விளையாட்டுப் பிரிவினால் வாராந்தம் ஒளிபரப்பாகும் விளையாட்டு நிகழ்ச்சிகளினிடையே கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகளை விசேடமாகக் குறிப்பிட முடியும்.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக இடம் பெறுகின்ற விளையாட்டுக்களை தொகுத்து தயாரிக்கப்பட்ட விளையாட்டு பல்வகை நிகழ்ச்சியினை வாரந்தோறும் ஒளிபரப்பாகும்.

இதற்கு மேலதிகமாக 2021 ஆம் ஆண்டினுள் நேரடியாக ஒளிபரப்பாகிய நிகழ்ச்சிகள்

England Tour Of Sri Lanka 2021

Hambantota Football League Final 2021

Guwan Hamuda Papedi Sawariya 2021

Dialog Rising Star Netball Championship Final 2021

கிரிகட் ரஜித கொண்டாட்டம்

Bangladesh Tour of Sri Lanka 2021

Had to Olympic-2021

ஆரம்பத்திற்கு முன்னர் கொண்டாட்டம் டோக்கியோ ஒலிம்பிக் ஆரம்ப விழாவிற்கு முன்னர்.

2021 Tokyo Para Olympic Gold Medalists

பந்துல வர்ணபுரி நினைவலைகள்

21st Asian Senior Mens Volleyball Champion Ship 2021

Susanthika Jayasinghe Interview with Amantha (Nugasevana Programme)

Dialog Presidents Gold Cup Final 2021

Redbull Womens Campus Cricket Final 2021
Kothmale Hill Climb 2021

ரன் பெலகர 1991 தெற்காசிய மகளிர் வலைப்பந்தாட்ட கின்னம் 30 வருட கொண்டாட்டம்

Sri Lanka Tour of South Africa-1" Test

South Africa Legends Vs India Legends Highlights

Sri Lanka Legends Vs Bangladesh Legends Highlights

England Legends Vs South Africa Legends Highlights

Bangladesh Legends Vs West Indies Legends Highlights

Semi Final India Legends Vs West Indies Legends Highlights

1st Semi Final Sri Lanka Legends vs west Indies Legends Highligts

Road Safety World Series Final

Sri Lanka Tour of West Indies 2021

Sri Lanka Tour of Bangladesh 2021

Sri Lanka Tour of England 2021

Asian Central Zone Mens Vollyball Challenge Cup Final 2021

நிகழ்சி நிருவாகப் பிரிவு

2021ஆம் ஆண்டினுள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கோப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரிவு	கோப்புக்களின் எண்ணிக்கை
பல்வேறு நிகழ்ச்சிகள்	478
கல்வி நிகழ்ச்சிகள்	306
செய்திகள	172
ஐ அலைவரிசை	165
வர்த்தகம்	15
மொத்தம்	1136

நேத்ரா அலைவரிசை தமிழ் நிகழ்ச்சிப் பிரிவு

நேத்ரா அலைவரிசை 2021ஆம் ஆண்டினுள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

குருகுலம்

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்

கட்கக் கசடர

பிரவாகம்

நோன்மதி தின விசேட நிகழ்ச்சி

பௌர்ணமி

கொரோனா கலந்துரையாடல்

மல்லிகை

சமதர்மம்

தகவல் பெட்டகம்

மக்கள் மேடை

சௌபாக்கியமான தேசம்

Eaqual Parents

சவால்

அருள் ஊற்று

தர்மம்

Covid-19 விசேட மக்கள்

Sanitary Develop

Discussion – National Production Village Programme

இதற்கு மேலதிகமாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விசேட நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
தைப் பொங்கல் (Festival) – Pongal Celebration

X Mas Mid Night Mass Pongal (Festival) - Debate Programme

தைப் பொங்கல் (Festival) – விவாத நிகழ்ச்சி

Mahashivarathri - Religious Festival
Mahashivarathri - Special Discussion

Good Friday - Special Programme

Ester Sunday Special

Sinhala& Tamil New Year – Special/ Special Greeting

Special Debate

Tamil New Year-Special Discussion

Navarathri Festival

Depavali Festival XMas Greeting -X Mas Special

Meetpar Piranthar-X Mas Special
Caroles Geethangal-X Mas Special

Geethangal / Piranthar Iral Magan-X Mas Special

<u>செனல் ஐ அலைவரிசை</u>

அலைவரிசை 1999 ஏப்ரல் மாதத்தில் ரூபவாஹினி 2ஆவது அலைவரிசையாக ஒளிபரப்பினை ஆரம்பித்தது. 2000 ஆகஸ்ட் மாதத்தில் அது செனல் ஐ ஆக மாற்றப்பட்டது. கல்வி, இளமை மற்றும் பொழுது போக்குகள் போன்ற அலைவரிசையின் மூன்று கோபுரங்களாக காணப்பட்டன. அலைவரிசையின் பரந்த அளவிலிருந்து நிகழ்ச்சித் தயாரிப்பு மற்றும் விளையாட்டு விடயங்கள் ஒளிபரப்பியது. செனல் ஐ இல் முதல் ஆண்டுகளில் அது டிஸ்கவரி அலைவரிசையில் அறிக்கைப் படங்கள் ஒளிபரப்பப்பட்டன.

செனல் ஐ என்ற இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஆங்கிள அலைவரிசையாவதுடன், அது ஆங்கிளம் பார்ப்பவர்களுக்கான ஆங்கிள நிகழ்ச்சிகளைத் தயாரித்து செயற்படுத்தப்படுகின்றது. நேரடி ஒளிப்பதிவு மற்றும் பொது மக்களின் அடிப்படைத் தேவைக்களுக்குப் பொருந்தும் வன்னம் குறிப்பிட்ட கால வரையரையின் அடிப்படையில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் ஒளிபரப்புதல். பல்வேறு விதமான பார்வையாளர்களுக்காக வேண்டி கலந்துரையாடல்கள், சஞ்சிகைகள், பொழுது போக்கு, விளையாட்டு ஆகிய துறைகளை அடிப்படையாகக் கொண்டு ஆங்கிள நிகழ்ச்சிகளை தயாரித்தல். உள்நாட்டு மற்றும் சர்வதேசம் என்ற வகையில் பொது மக்களின் தேவைகளுக்காக வேண்டி காலை நேரங்களில் தயாரிப்பு நடவடிக்கைகள் இடம்பெறும். நிபுணத்துவம் வாய்ந்த வர்த்தக செய்திகள் மற்றும் வெளிப்பாடுகள், சட்டம் மற்றும் நீதி, பொழுது போக்கு மற்றும் பௌத்த மதம் தொடர்பான கலந்துரையாடல்கள் உள்ளடங்களான நிகழ்ச்சிகள் மாலை நேரங்களில் தயாரித்து ஒளிபரப்பப் படுகின்றது. பரந்த எல்லையைக் கொண்டுள்ள ஒரே ஆங்கிள அலைவரிசை என்பதுடன்,அரங்கத் தயாரிப்புக்களின் போது விசேட தன்மையினைக் கொண்டுள்ளது.

அலைவரிசையின் ஆளணியினர்

பிரதிப் பணிப்பாளர் - 01
உதவித் தயாரிப்பாளர் - 03
தயாரிப்பு உதவியாளர் - 01
அலுவலக உதவியாளர் - 01

ஐ அலைவரிசை 2021ஆம் ஆண்டினுள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகளைத் தயாரித்துள்ளது.

திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி	ஞாயிறு
ஐ சபல் (எல்லா வாரங்களி லும்) 22.00-22.30	கெபே க்ளஸிக் (எல்லா வாரங்களி லும்) 22.00-22.30	பிஸ்னஸ் டுடே (எல்லா வாரங்களி லும்) 22.00-22.30	ஐ மேட் (எல்லா வாரங்களி லும்) 22.00-22.30	லோ என்ட் ஓடர் (எல்லா வாரங்களி லும்) 22.00-22.30	லோகல் ஹன்ட் (எல்லா வாரங்களி லும்) 22.00-22.30	ஸ்போட் லைட் (எல்லா வாரங்களி லும்) 07.30
பாத் டு பிரீடம் (அனைத்து நோன்மதி தினங்களி லும்) 22.00-22.30				சிநே மெக் (2 மற்றும் 4 வாரங்கள்) 22.00-22.30		டிப்ளோமெ டிக் பேஸஸ் (எல்லா வாரங்களி லும்) 22.00-22.30

முஸ்லிம் நிகழ்ச்சிப் பிரிவு

நேத்ரா அலைவரிசையின் கீழ் முஸ்லிம் நிகழ்ச்சிப் பிரிவு செயற்படுகின்றது. இந்தப் பிரிவு பிரதிப் பணிப்பாளர், தயாரிப்பாளர் மூவர், மற்றும் ஒரு சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர்காளல் அமையப் பெற்றுள்ளது. முஸ்லிம் நிகழ்ச்சி நேத்ரா அலைவரிசையினூடாக ஒளிபரப்பப் படுகின்றது. முஸ்லிம் நிகழ்ச்சி மூலம் முஸ்லிம் நேயர்களுக்கு உள்நாட்டு வெளிநாட்டு மதக் கலாசார நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

தயாரிக்கப் படுகின்ற நிகழ்ச்சிகள்

- கலந்துரையாடல் மற்றும் சஞ்சிகை நிகழ்ச்சிகள் (வாராந்தம் - நேரடி) 3 x 30 mts
- ரமழான் இப்தார் நிகழ்ச்சி (சமயம்) 30 x 30 mts
- வைபவங்களுக்கு உரியதான நிகழ்ச்சிகள் 3 x 20 hrs
- வாராந்தம் அறிக்கை, இளைஞர் சஞ்சிகை மற்றும் இசை நிகழ்ச்சிகள் தயாரித்தல் 3 x 30 mts
- வைபவங்களுக்கு உரியதான நிகழ்ச்சிகள் தயாரித்தல் 3 x 60 mts
- கோவிட் - 19 தொற்றுக் காலத்தில் யாதேனுமொரு புலமைப் பரிசில் பெறுபவர் மற்றும் துறைசார் தொழில் நிபுணர்களுக்காக தெளிவுபடுத்தும் நிகழ்ச்சிகள் தயாரித்தல்

கல்விச் சேவைப் பிரிவு

கல்விச் சேவைப் பிரிவின் கீழ் 3 பிரிவுகள் உள்ளன.

- கல்விச் சேவைப் பிரிவு
- அறிக்கை நிகழ்ச்சிப் பிரிவு
- சிறுவர் பிரிவு

கல்விச் சேவைப் பிரிவு

கல்விப் பிரிவின் அலகுகளில் ஒரு பிரதான அலகாக அமைவது கல்விச் சேவைப் பிரிவாகும். இலங்கை ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஆரம்பம் முதல் கல்விச் சேவைப் பிரிவிற்கு ஒரு சிறப்பான இடம் கிடைக்கப்பெற்றுள்ளது. இலங்கையின் பிள்ளைகளின் கல்விக்கு ஊடகத்தினூடாக கைகொடுப்பதினூடாக முறைசார் மற்றும் முறைசாரா கல்வி நிகழ்ச்சிகளை தயாரித்து ஒளிபரப்புவது கல்வி நிகழ்ச்சிப் பிரிவின் அடிப்படை நோக்கமாகும். அந்நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்காக ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆரம்பம் முதல் 2020 வரை 4 தசாப்த்த காலங்களாக பல்வேறு துறைகளினூடாக கல்வி நிகழ்ச்சிகளை தயாரித்து ஒளிபரப்பி இலங்கையின் பிள்ளைகளின் கல்வி ஞான விளக்கை ஏற்றுவதற்காக விசேட அலுவலொன்றினை ஆற்றி வருகின்றது.

2000 ஆம் ஆண்டு முதல் முறையான நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக முறையில்லா மற்றும் சஞ்சிகை நேரடி நிகழ்ச்சிகள் போன்றே நிறுவனத்தின் நிதித் தன்மையை உயர்த்துவதற்காக வேண்டி நிகழ்ச்சிகளினூடாக பங்களிப்புச் செய்ததுடன், கஷ்டப் பிரதேசங்களில் உள்ள பிள்ளைகளுக்கு கல்விக்கு கைகொடுப்பதற்காக கல்வி உதவி நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகள் பல நடாத்துவதும் கல்விப் பிரிவின் மூலம் இதுவரை மேற்கொண்டுள்ள விசேட அலுவல்களில் ஒரு சிலவாகும்.

கல்விப் பிரிவின் மூலம் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் சர்வதேச விருதுகளுக்காகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். முதலில் கல்விப் பரிவின் யப்பான் சர்வதேச விருதினைப் பெற்றக் கொண்ட நிகழ்ச்சி நிரஞ்சலா வீரக்கொடி தயாரித்து வழங்கிய அக்ஷர புரானய, சந்திரா ஜயதிலக்க தயாரித்து வழங்கிய சர்வதேச பிராந்திய விசாரணைகள், க.பொ.த(உ.த) நிகழ்ச்சியும், உபதிஸ்ஸ பி. நிஷ்ஷங்க தயாரித்து வழங்கிய வெந்துனு மங் (The best television TV programme on protection of indigenous minorities) – 2015(AIBD)சிறந்த விருதுகளைப் பெற்றுக் கொண்டன.

இதன் பின்னர் 2021 ஆம் ஆண்டு வரை தேசிய விருதுகள் பலவற்றை கைப்பற்றிக் கொள்வதற்கு கல்விப் பிரிவிற்கு முடியுமானது.

பிரிவினால் 2021ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட சமூக நிவாரண நிகழ்ச்சிகள்

விசேடமாக கொரோனா தொற்று காரணமாக பாடசாலை கல்வி முறைமையை மூடியிருந்த காலத்தினுள் 2021ஆம் ஆண்டில் க.பொ.த (உ.த), பரீட்சைக்குத் தோற்றுகின்ற இலங்கையின் பிள்ளைகளுக்காக முறையாக அதிகளவு மாணவர்கள் தோற்றுகின்ற விடயங்கள் 10 இனைத் தெரிவு செய்து குருதலாவ மூலம் விசேட நேரடி நிகழ்ச்சிகள் மாதம் முழுவதும் ஒளிபரப்பாகியது. இந்த நிகழ்ச்சிகள் உயர்தர மாணவர்களிடையே பிரசித்தி பெற்றதுடன், அதற்கு ஒரு காரணமாக அமைந்தது நாட்டின் பிரபல்யமான வளவாளர்களை இதற்காக வேண்டி கலந்து கொள்ளச் செய்தமையாகும். அவர்களது சேவை இலவசமாக வழங்கியது சிறப்பம்சமாகும். பி.ப 2.00 மணி முதல் 4.00 மணி வரை இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்படுகின்றது. பி.ப. 4.00-5.00 வரை "நென மிஹிர" நிகழ்ச்சிகள் புலமைப் பரிசில் நேரடி ஒளிபரப்பு இடம்பெற்றது.

தேசிய பாடசாலை என்ற பெயரில் க.பொ.த. (சா.த) மாணவர்களுக்காக வார நாட்களில் 5.15-6.00 மணி வரை ஒளிரப்பாகிய நிகழ்ச்சிகள் சாதாரண தர மாணவர்களிடையே பிரபல்யம் அடைந்த நிகழ்ச்சியாகும். திங்கள் (வரலாறு) செவ்வாய் (ஆங்கிளம்) புதன் (விஞ்ஞானம்) வியாழன் (கணிதம்) வெள்ளி (சிங்களம்) என பிரதான பாடங்கள் 5 இந்த நிகழ்ச்சி மூலம் தெரிவு செய்யப்பட்டது. இந்த அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் ரூபவாஹினி அலைவரிசையினூடாக பார்ப்தற்கான சந்தர்ப்பத்தினை வழங்கியமை விசேடமாகும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியில் நிலைப்பாட்டினை உயர்த்துவதற்காக கல்விப் பிரிவினால் மேற்கொண்ட திட்ட நிகழ்ச்சிகள்

கூட்டுத்தாபனத்தினை கட்டியெழுப்புவதற்காக அதன் நிதி நிலைமையினை உயர்த்துதல் மற்றும் சமூக நலன்புரி நிகழ்ச்சிகள் பலவற்றை கல்விப் பிரிவினூடாக 2021ஆம் ஆண்டு வரை செயற்படுத்தியுள்ளது.

2011ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு 2021 வருடமாகும் போது குழந்தைகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றார்களிடையே பிரபல்யம் பெற்ற நிகழ்ச்சிகளுள், புஞ்சி அபே நென மிஹிர வினாவிடை சஞ்சிகை நிகழ்ச்சி பிரதான இடத்தை வகிக்கின்றது. 2021ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தின் மூலம் வினா விடை சஞ்சிகை 70000 பிரதிகள் விற்பனை

செய்வதினூடாக 22 மில்லியன் ரூபா நிகர நிதி வருமானத்தினை நிறுவனத்திற்கு ஈட்டித் தந்தது.

அந்த வினாவிடை சஞ்சிகை வினியோகிப்பதன் மூலம் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களுக்கு பரீட்சைக்காக வேண்டி உதவுவதுடன்,ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் கல்வி நிகழ்ச்சியினை பிரபல்யப்படுத்துவதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் வளர்ச்சிக்கு இது பாரிய உதவியாக அமைகின்றது.

அவ்வாறே, கல்விப் பிரிவினால் தயாரிக்கப்படுகின்ற ரிவிதின அருனெல்ல விவசாய வீட்டுத் தோட்ட நிகழ்ச்சிகள் 2022 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், அதனுடன் இணைந்ததாக திட்டமிடப்பட்ட ‘‘ரன் அஸ்வனு மஙகல்ய’’ நாடு பூராகவும் வீட்டுத் தோட்ட பயிரிடும் போட்டிகள் இலங்கை நேயர்களிடையே நச்சுத்தன்மையற்ற வீட்டுத் தோட்டமொன்றினை உருவாக்குவதற்காக பாரியதொரு உறுதுணையாக அமைந்தது. அரசின் விவசாயக் கொள்கைக்குள் உள்நுழைந்து செயற்படுகின்ற இந்த நிகழ்ச்சி உள்நாடு மற்றும் சர்வதேச ரீதியில் 10 விருதுகளைப் பெற்றுக் கொண்டமை சிறப்பம்சம் ஆகும்.

அறிக்கை மற்றும் பல்வகைப் பிரிவு

இந்தப் பிரிவு நிறுவனத்தின் ஆரம்ப காலம் தொட்டே, கல்விப் பிரிவில் நிறுவப்பட்ட ஒரு பிரிவாகும். சர்வதேச அடிப்படையில் நோக்கும் போது அறிக்கை நிகழ்ச்சிகள் பிரிவு விசேட இடத்தை வகிக்கின்றது. அறிக்கை நிகழ்ச்சிகள், சஞ்சிகை நிகழ்ச்சிகள், சுற்றுலா அறிக்கை நிகழ்ச்சிகள், அறிவியல் வினா நிகழ்ச்சிகள் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த நேரடி நிகழ்ச்சிகள். அரச நிறுனங்களுக்கான அறிக்கை நிகழ்ச்சிகள், பல்வகை நிகழ்ச்சிகள் இந்தப் பிரிவினால் தயாரிக்கப்படுகின்றது. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு முதல் சர்வதேச விருதினை பெற்றுத் தந்ததும் இந்த அறிக்கை மற்றும் பல்வகை பிரிவினாலாகும். அது 1983ஆம் ஆண்டு சிசிர சுரவீரவினால் தயாரிக்கப்பட்ட ‘‘களு தியமந்தி’’ அறிக்கை நிகழ்ச்சியாகும். அன்று முதல் இன்று வரை சர்வதேச விருது விழாக்களில் அறிக்கை நிகழ்ச்சிக்காக பல விருதுகளை அறிக்கைப் பிரிவின் தயாரிப்பாளர்கள் பெற்றுக் கொண்டார்கள். ரூபவாஹினி நிகழ்ச்சிகளிடையே நாட்டில் பிரபல்யமான நிகழ்ச்சிகள் பல தயாரிக்கப்பட்டதும் இப்பிரிவின் தயாரிப்பாளர்களினாலாகும். உருமய, ரசகலச, நவயைப் பஹ, சரிசர அரும புதும யோத ஹதர, தாரா, ஆனந்த ராத்ரிஇவற்றுள் முதன்மை நிகழ்ச்சிகளாகும். இதற்கு மேலதிகமாக ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமான்றத் தேர்தல்களின் அரசியல் அபேட்சகர்களின் உரைகள் ஒளிப்பதிவு செய்து ஒளிபரப்புச் செய்வதும் இப்பிரிவினாலாகும்.

*உதவிப் பணிப்பாளர் ஒருவர் அல்லது நிறைவேற்று தயாரிப்பாளரின் கீழ் நிருவாகப் பிரிவின் சிரேஷ்ட தயாரிப்பாளர்கள் இருவர் மற்றும் தயாரிப்பாளர் 04 பேர், தயாரிப்பு உதவியாளர்கள்

இருவர், எழுதுனர் மற்றும் அலுவலக உதவியாளர் என இப்பிரிவின் ஆளணிச் சபை அமைகின்றது.

*பிரிவின் நிறைவேற்றுத் தயாரிப்பாளர் தொடக்கம் தயாரிப்பு உதவியாளர் இருவர் அடங்களாக அனைத்து தயாரிப்பாளர்களும் வாராந்தம் ஒளிபரப்பப்படுகின்ற தாரா அறிக்கைக்காக நிகழ்ச்சிகள் தயாரிக்க வேண்டும். இதற்காக பூஜித திசாநாயக்க பிரசன்ன முதன்மையாகக் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இருப்பினும் கொவிட் நிலைமை காரணமாக கூட்டுத் தாபனத்தின் நிதி நிலைப்பாட்டின் அடிப்படையில் நிகழ்ச்சிகள் குறைந்த அளவில் தயாரிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக ஞாயிறு தினங்களில் ஒளிபரப்பப்படுகின்ற அரை மணித்தியாலய ஆயுபோவேவா சுகாதார சஞ்சிகை நிகழ்ச்சியில் செல்வி சந்தியா வித்தானகம தயாரித்து வழங்குகின்றார். நாமல் சூரிய பண்டார மற்றும் சந்தன செனவிரத்ன அரும புதும யோத ஹதர சஞ்சிகை நிகழ்ச்சியை தயாரித்து வழங்குவதுடன்,ஞாயிறு இரவு 9.30 மணிக்கு ஒளிபரப்பாகும் அரை மணித்தியாலய நிகழ்ச்சியாகும். சந்தசுன,சபுவன என்ற பெயரில் ஒளிரப்பாகின்ற கதோலிக்க மற்றும் கிறிஸ்த்தவ நிகழ்ச்சி மாதத்திற்கு ஒரு தடவை கடைசி ஞாயிற்றுக் கிழமை மாலை 06.00 மணிக்கு ஒளிபரப்பாவதுடன், அதன் தயாரிப்பாளர் ரங்க சேனாதீர என்பவர் ஆகும். ஞாயிறு ஆயுபோவன் நிகழ்ச்சிகள் இரண்டு செல்வி மயுரி வானகுரு தயாரித்து வழங்குவதுடன், கமல் காரியவசம் ஒரு ஞாயிறு ஆயுபோவன் நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்குகிறார். பிரிவின் தயாரிப்பு உதவியாளர்கள் இருவர் தயாரிப்பாளர்களின் தயாரிப்பிற்காக பங்களிப்புச் செய்கின்றார்கள். காஞ்சன மாரசிங்க, கமல் காரியவசம் ஆகிய இரண்டு தயாரிப்பாளர்களும், கல்விப் பிரிவின் குருதலாவ நிகழச்சிக்காக தயாரிப்பின் போது பங்களிப்புச் செய்கின்றார்கள். கமல் காரியவசம் இந்தப் பிரிவின் நடவடிக்கைகளுக்க மேலதிகமாக நடப்பு விவகார பிரிவில் தயாரிப்பு நடவடிக்கைகளுக்காக தன்னார்வமாகவே கலந்து கொள்கின்றார்.

கொவிட் தொற்று நிலையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட குருகெதர கல்வி நிகழ்ச்சி ஒளிபரப்பு கண்காணிப்பு மேற்கொள்ளப்படுவது அறிக்கை நிகழ்ச்சிப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் திரு. சந்தன செனவிரத்ன என்பவரால் ஆகும். இது 16 மணித்தியாலயங்கள் ‘‘ஐ’’ அலைவரிசை மற்றும் ‘‘நேத்ரா’’ அலைவரிசையினூடாக ஒளிபரப்பப்படுகின்றன.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் தொடர்பான அறிக்கை நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுவதும் இவ் அறிக்கை நிகழ்ச்சிப் பிரிவினாலாகும்.

கூட்டுத்தாபனத்தன் நிதியியல் நிலைமையினை சிறப்பாக வைத்திருக்க வேண்டும் என்ற நோக்கில் பிரிவின் தயாரிப்பாளர்களினால் பல்வேறு அரச நிறுவனங்களுக்குச் சென்று நிகழ்ச்சித் தயாரிப்பிற்காக திட்டங்களை முன்வைத்து வெற்றிகரமான பெறுபேறுகளை கைப்பற்றிக் கொண்டது.

நீண்ட காலமாக தயாரிப்பாளர்களுக்காக இடம்பெற்ற சிரமங்களாக அமைந்தது, நிகழ்ச்சிகளை நெறிப்படுத்துவதற்கான வசதிகள் மற்றும் நெறிப்படுத்தல் கலைஞர்களின் பற்றாக்குறையாகும். இதற்கான தீர்வாக அறிக்கைப் பிரிவிற்காக நெறிப்படுத்தல் உபகரணங்கள் பல்வேறு பின்வாங்கள்கல் சிரமங்களுக்கு மத்தியில் பெற்றுக் கொண்டதுடன், அது ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நிருவாக கலாசாரத்திற்கு வெற்றிகரமான மாற்றத்திற்கு மாற்றப்பட்ட சந்தர்ப்பமாகும். தற்காலத்தில் தயாரிப்பாளர்களே தமது நிகழ்ச்சிகளை நெறிப்படுத்துகின்றார்கள். இதற்காக அவர்களுக்கு பிரவின் தலைவரினால் பயிற்சி வழங்கப்படுவதுடன், பிரவின் நெறிப்படுத்துகை பிரச்சினை 95% தீர்க்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களினால் பயிற்சிக்காக வருகின்ற பயிலுனர்கள் குறுகிய கால சேவைக்கு இணைத்துக் கொள்வதினூடாக அவர்களுக்கு பயிற்சியொன்று கிடைப்பதுடன், நிறுவனத்திற்கு குறைந்த செலவில் சேவையொன்றினைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது என்பதை தெளிவு படுத்தியுள்ளது. இதனை வெற்றிகரமாக இந்தப் பிரிவு முயற்சி செய்து பார்த்துள்ளது.

சிறுவர் நிகழ்ச்சிப் பிரிவு

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப வைபவம் இடம்பெற்ற 1982.02.15ஆந் திகதி முதல் சிறுவர் நிகழ்ச்சிப் பிரிவு ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் நிறுவப்பட்ட நிகழ்ச்சிப் பிரிவாக அமைவதுடன், 2021ஆம் ஆண்டு வரை 39 வருடங்களாக இலங்கையின் பல பரம்பரைகளின் சிறுவர்களுக்கு கல்வியினை வழங்குவதற்கும், அவர்களின் அறிவு மற்றும் இரசனையினை அதிகரிக்கச் செய்வதற்கும் சிறுவர் நிகழச்சி முதன்மையான பங்களிப்பினை வழங்கியுள்ளது.

தேசிய தொலைக்காட்சி ஆரம்பத்தில் இலங்கையில் இடம்பெற்ற முதற்தர தேசிய இலத்திரனியல் அலைவரிசையாக இருந்த போதும்,மிகவும் பொறுப்புடன், சிறார்களுக்கு இரசணையினை வழங்குவதற்கு முற்பட்ட போதிலும், இதுவரை இலாபத்தினை நோக்காய் கொண்ட தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகள் பாரியளவில் மற்றும் புதிய சமூக ஊடகங்களினால் தீவிரமாக சிறுவர் விற்பனைப் பொருளொன்றாக மாற்றம் பெற்றுள்ளநிலையில் மிகவும் தீர்க்கமானதொரு குறுக்கு வழியில் பயனித்துக் கொண்டிருக்கிறோம்.

இவ்வாறான பிரச்சினைகள் நிறைந்த சமூக சூழலினுள் ஆயிரம் தடைகளைத் தாண்டி அதற்கு ஈடான வேறு வழிமுறைகளை "எதிர்கால சந்ததியினர்களை உருவாக்க வேண்டிய" பொறுப்பொன்றுடன் இணைந்து தேசிய அலுவல்களில் ஈடுபட்டுள்ள தேசிய ரூபவாஹினி சிறுவர் பிரிவு,"குழந்தை என்பது, இயற்கை கலாச்சார ஒப்புதல்களை ஏற்றுக் கொள்கின்ற

விருப்பினை முன்னுதாரணமாயக் கொண்டு வயதுவந்தோர் பக்கம் பார்க்கும் கறைபடாத புதிய குடிமகனாகும்" என்பதை யதார்த்தமாக்கும் பணியில் இன்று ஈடுபட்டு வருகின்றது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

சிறுவர் நிகழ்ச்சிப் பிரிவின் பதவிப் பெயர்களும் சேவையாளர்களின் எண்ணிக்கையும்

- பிரிவுத் தலைவர் -01
- சிரேஷ்ட நிகழ்ச்சித் தயாரிப்பாளர் -02
- நிகழ்ச்சித் தயாரிப்பாளர் -02
- உதவித் தயாரிப்பாளர் -03
- தயாரிப்பபு உதவியாளர் -01
- முகாமைத்துவ உதவியாளர் -01
- மொத்த சேவையாளர்களின் எண்ணிக்கை -12

பிரிவின் அனைத்து நிகழ்ச்சிகளினதும் கண்காணிப்பு, கோப்புக்கள் மற்றும் கடமைக் கோப்புக்கள் பரிந்துரைத்தல் மற்றும் தேவையான ஆலோசனைகள் வழங்குதல், பிரிவின் அனைத்து நடவடிக்கைகள் மற்றும் பிரிவின் நிகழ்ச்சி முகாமைத்துவப் படுத்தல் மற்றும் நிறுவனத்தின் உயர் முகாமைத்துவத்துடன் பிரிவு தொடர்பான நடவடிக்கைகளை இணைந்து செயற்படுத்தி வருகின்றது.

"பாட்ட பாட்ட /சனிதா செந்தேவே வர்ணவத் ழமாவிய"

சிறுவர் சஞ்சிகை நிகழ்ச்சி
60 விநாடிகள் 45 நிகழ்ச்சிகள்
ஒளிபரப்பாகிய நேரம் சனிக்கிழமை பி.ப. 5.00 முதல் 6.00 வரை

"புஞ்சி அபித் ரசட உயமு"

ழமா இவும் பிகும் நிகழ்ச்சி
30 விநாடி நிகழ்ச்சிகள் - 45
ஒளிரப்பாகிய நேரம் வியாழன் பி.ப. 5.00 முதல் 5.30வரை

"2021 தேசிய சிறுவர் தின நிகழ்ச்சிகள்"

சிறுவர் மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சின் முழுமையான அனுசரனையுடன் ரூபவாஹினி 03 நிலையக் கலையகத்திலிருந்து நேரடியாக.

03 மணித்தியாலய நேரடி ஒளிபரப்பு
ஒளிபரப்பாகிய நேரம் 2021.10.01 மு.ப. 9.00 மணி முதல் மு.ப. 12.00 மணி வரை

நத்தல் அசிரிய

விசேட நத்தார் நேரடி சிறுவர் நிகழ்ச்சிகள் - 45 நிமிடம்

ஒளிபரப்பாகிய நேரம் 2021.12.25ஆந் திகதி பி.ப. 5.00மணி முதல் 6.00 மணி வரை

இதற்கு அலுல்களுக்கு மேலதிகமாக ஏ.பி.யு. சிறுவன் நாடக பரிமாற்றத்திற்காக திரைக்கதை அமைத்ததுடன், அதன் தயாரிப்பு நடவடிக்கைகள் எதிர்காலத்தில் நிகழ்த்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது. அவ்வாறே, நிகழ்ச்சி நெறிப்படுத்துகை செய்வதற்காக இணைந்து கொண்டுள்ளார்.

"சவனக் ரெஸ்"

நோன்மதி தின சிறுவர் நிகழ்ச்சி

30 விநாடி நிகழ்ச்சி –03

ஒளிபரப்பாகிய நேரம் நோன்மதி தினம் பி.ப. 4.00 முதல் 4.30 வரை

"முதுகர"

நாடு தழுவிய முதுகர சிறுவர் சமூகத்திற்காக சிறுவர் சஞ்சிகை நிகழ்ச்சி

30 விநாடி நிகழ்ச்சி – 40

ஒளிபரப்பாகிய நேரம் செவ்வாய்க் கிழமை பி.ப. 5.00 முதல் 6.00 வரை

(இந்த நிகழ்ச்சிக்காக வெளிநாட்டிலுள்ள முதுகர சிறுவர்கள் சமுகத்திலுள்ள சிறுவர்கள் தொலை தொழில்நுட்பத்தினூடாக தொடர்பு கொண்டு அவர்களின் ஆற்றல்களை முன்வைத்தார்கள்)

அவ்வாறே, முதுகர நிகழ்ச்சி 2021 ஆண்டு ரைகம் ரெலி சம்மான விருதில் சிறந்த சிறுவர் நிகழ்ச்சிக்காக பரிந்துரைக்கப்பட்டது.

"அபே பெய"

சிறுவர் ஓவிய நிகழ்ச்சி

60 விநாடி நிகழ்ச்சி – 46

ஒளிபரப்பாகிய நேரம் வெள்ளிக் கிழமை பி.ப. 5.00 முதல் 6.00 வரை

வினாடி 09

மனோவியல் சுகாதாரத்தினை முன்னேற்றுவதற்காக மனோவியல் கலந்துரையாடல் நிகழ்ச்சி 09 வினாடி 39 நிகழ்ச்சிகள்

கியன்ன பெரிதே அந்தின்ன
தேசிய சிறுவர் தினத்துடன் இணைந்ததாக விசேட சித்திர நிகழ்ச்சி

01 மணித்தியாலயம் - 01 நிகழ்ச்சி
(இதற்காக சிறுவர் மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சின் முழுமையான அனுசரனை கிடைக்கப் பெற்றது.)

ஒளிபரப்புச் செய்யப்பட்ட நேரம் 2021.10.09ஆந் திகதி பி.ப. 5.00 தொடக்கம் 6.00 மணி வரை

ழமா சித்தட சவியக்

சிறுவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அவர்கள் அரச நிறுவன அதிகாரிகளுடன் நிகழ்த்திய கலந்துரையாடல் நிகழ்ச்சி

01 மணித்தியாலயம் - 01 நிகழ்ச்சி

(தேசிய செயற்பாட்டுக் குழுவினால் ரூபா. 300000 முழுமையான வர்த்தக அனுசரனை தயாரிப்பாளரினால் வழங்கப்பட்டது.)

ஒளிபரப்பாகிய நேரம் 2021.10.02ஆந் திகதி பி.ப 7.00 முதல் 8.00 மணி வரை

ஏய்ட்ஸ் வலக்கமு விசேட நிகழ்ச்சி

01 மணித்தியாலயம் - 01 நிகழ்ச்சி

(இதற்காக ஐக்கிய நாடுகள் மக்கள்தொகை மேம்பாட்டு நிதியின் மூலம் ரூபா. 400000 முழுமையான வர்த்தக அநுசரனையுடன் தயாரிப்பாளரினால் வழங்கப்பட்டது.)
ஒளிபரப்பாகிய நேரம் 2021.11.28ஆந் திகதி பி.ப 7.00 முதல் 8.00 வரை

போசனயென் ரெகவரனய விசேட நிகழ்ச்சி

01 மணித்தியாலயம் - 01 நிகழ்ச்சி

(இதற்காக உலக உணவு நிகழச்சியின் மூலம் ரூபா. 400000 முழுமையான அநுசரனையினை தயாரிப்பாளரினால் வழங்கப்பட்டது.)

ஒளிபரப்பாகிய நேரம் ஞாயிறு பி.ப. 4.45 முதல் 5.00 மணி வரை

தகம் பத்ம

நோன்மதி தின விசேட சிறுவர் நிகழ்ச்சி மற்றும் சமய பேச்சு நிகழ்ச்சி 30 வினாடி – 12 நிகழ்ச்சி

ஒளிபரப்பாகிய நேரம் நோன்மதி தினம் மு.ப. 11.00 முதல் 12.00 மணி வரை

சிந்து கோச்சிய

இசை நோக்குடனான இசை நிகழ்ச்சி

60 வினாடிகள் 44 நிகழ்ச்சிகள்

ஒளிபரப்பாகிய நேரம் புதன் கிழமை பி.ப. 5.00 மணி முதல் 6.00 மணி வரை

இதற்கு மேலதிகமாக விசேடமாக குறிப்பிடப் படவேண்டியது 2021 தேசிய சிறுவர் தின விழா மற்றும் ஏனைய அலைவரிசைகளில் சிறுவர்களை வரவழைத்து நிகழ்ச்சிகளை நடாத்தும் போது சிறுவர்களுக்கு வீட்டிலிருந்தே தொலைபேசி மூலம் பல்வேறு மென்பொருள்களினூடாக தேசிய தொலைக்காட்சியுடன் இணைந்து கொண்டு 2021.10.01ஆந் திகதி நாள் பூராகவும் சிறுவர் தின நிகழ்ச்சிகளுடன் இணைந்து கொள்வதற்கான இடவசதிகளை அமைத்துக் கொடுப்பதுடன், தொலைக்காட்சி நிலைய கலையகத்திலிருந்து நேரடியாகவும், ஒளிப்பதிவு செய்யப்பட்ட விசேட சிறுவர் நிகழ்ச்சிகள் பல அதன்போது ஒளிபரப்பாகியது.

இங்கு தூரத்திலிருந்து பங்கேற்கும் சிறுவர்களுக்கு பரிசாக எம்.டீ. குணசேன நிறுவனத்தினால் மலலசேகர ஆங்கிளம் சிங்களம் அகராதி 10 உம், எஸ் கொடகே வெளியீட்டாளர்களினால் கொடகே சதர்தவாகினி ஆங்கிள சிங்கள அகராதி 10உம் மற்றும் சரசவி வெளியீட்டாளர்களினால் சரசவி ஆங்கிள சிங்கள அகராதி 10உம் ஆக பெறுமதி வாய்ந்த அகராதிகள் 30 சிறுவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டதுடன், 02 இலட்சம் ரூபாப் பெறுமதியான அனோடஸ் சொக்லட் பொதி 45உம் வழங்குவதற்கு வணிகப் பிரிவின் எவ்வித தலையீடுமின்றி சிறுவர் நிகழ்ச்சிப் பிரிவு என்ற வகையில் எம்மால் முடியுமானது.

அவ்வாறே 2021 தேசிய சிறுவர் தினம் தொடர்பாக 2021.10.01ஆந் திகதி நாள்தோறும், பத்திரிகையில் முழுப் பக்கத்தில் விளம்பரமொன்று மீள்வணிக ஒப்பந்தத்தின் கீழ் பெற்றுக் கொள்ள எம்மால் முடியுமானது.

செய்தி மற்றும் நடப்பு விவகாரப் பிரிவு

ஏனைய தொலைக்காட்சி அலைவரிசைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் தற்கால தேசிய தொலைக்காட்சி செய்திகள் தொடர்பாக பார்வையாளர்கள் வைத்துள்ள நம்பிக்கையை தொடர்ந்தும் உறுதிப் படுத்துவதற்காக உண்மையான மற்றும் துல்லியமான தகவல்களை பார்வையாளர்களுக்கே தாமதமின்றி வழங்குவதே தேசிய தொலைக்காட்சியின் முக்கிய நோக்கமாகும். குறிப்பாக இன்றைய சமூகத்தில் பல்வேறு வணிக நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தனியார் அலைவரிசைகள் உருவான போதிலும், சரியான, உண்மையான செய்திகளை பார்வையாளர்களுக்கு வழங்கும் பொறுப்பினை தேசிய தொலைக்காட்சி தொடர்ந்தும் நிறைவேற்றி வருகின்றது.

செய்தி மற்றும் நடப்பு விவகாரப் பிரிவு மேலும் இரண்டு பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளது.

- நடப்பு நிகழ்வுப் பிரிவு
- செய்தி புகைப்படப் பிரிவு

இதற்கு மேலதிகமாக செய்திப் பிரிவின் அலுவல் தன்மைக்கு ஏற்ப இன்னும் பல பிரிவுகளைக் கொண்டுள்ளது

- தமிழ் செய்திப் பிரிவு
- ஆங்கிள செய்திப் பிரிவு
- செய்தி ஊடகப் பிரிவு
- செய்தி இணையப் பிரிவு

➢ பிரிவின் பதவிப் பெயர்கள் மற்றும் பணியாளர் எண்ணிக்கை (2021ஆம் ஆண்டினுள்)

- ✓ பணிப்பாளர் (செய்தி மற்றும் நடப்பு நிகழ்வு) பதில்
- ✓ பிரதான செய்தித் தொகுப்பாளர்
- ✓ பிரதிப் பணிப்பாளர் (நடப்பு நிகழ்வு)
- ✓ பிரதிப் பணிப்பாளர் (பிரதேச செய்திகள்)
- ✓ உதவிப் பணிப்பாளர் (வெளிநாட்டுச் செய்திகள்)
- ✓ பிரிவுத் தலைவர் ((தமிழ் செய்தி)
- ✓ பிரிவுத் தலைவர் (செய்தி கெமரா)
- ✓ நிருவாக உத்தியோகத்தர்
- ✓ சிரேஷ்ட செய்தித் தொகுப்பாளர் /செய்தி தொகுப்பாளர்
- ✓ தயாரிப்பாளர்/ உதவித் தயாரிப்பாளர்/ தயாரிப்பு உதவியாளர்
- ✓ சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர் /முகாமைத்துவ உதவியாளர்கள்

- ✓ ஊடகக் காட்சி மற்றும் நேரடி ஒளிபரப்பாளர்கள்
- ✓ அலுவலக உதவியாளர் /ஈ.என்.ஜி. உதவியாளர்

2021ஆம் ஆண்டு செய்தி மறறும் நடப்பு நிகழ்வு பிரிவின் மொத்த சேவையாளர்களின் எண்ணிக்கை 103 ஆகும்.
(இந்த எண்ணிக்கை அடிக்கடி இடமாற்றம் இடம்பெறுவதினால் மாறுபடும்)

- செய்திப் பிரிவு - 65
- நடப்பு நிகழ்வுப் பிரிவு - 13
- செய்தி கெமராப் பிரிவு - 25

செய்தி கெமராப் பிரிவு

பிரிவுத் தலைவர், உபகரண செயற்பாட்டு அதிகாரியுடன் புகைப்படவியலாளர்கள் 14 பேரும்,ஈ.என்.ஜீ உதவியாளர்கள் 10 பேரும் பணியாற்றுகின்றனர். இப்பிரிவின் மூலம் உள்நாட்டு, சர்வதேச செய்திகள் சேகரிப்பு, இலங்கையில் நிலவுகின்ற உள்நாட்டு சர்வதேச அரச தலைவர்கள் கலந்து கொள்கின்ற உத்தியோகபூர்வ விழா நிகழ்வுகள், இலங்கையில் நிலவுகின்ற சர்வதேச பிரதிநிதிகளின் மாநாடு, அதிமேதகு ஜனாதிபதியவர்களினதும் பிரதமரினதும் செய்தி சேகரிப்பு, தேர்ல்கள் செய்தி சேகரிப்பு, இயற்கை அனர்த்தங்கள் உள்ளடங்களாக அனைத்து செய்திச் சேகரிப்புகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் பிரிவு Live UH உபகரணம் உள்ளடங்களாக அதிநவீன தொழில்நுட்பத்துடனான கெமரா மற்றும் உதிரிகளினால் உள்ளடக்கப்பெற்றுள்ளது. 2021ஆம் ஆண்டு கொவிட் 19 தொற்றினூடே நாளாந்தம் பணிகளில் ஈடுபடுவதுடன், அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றனர்.

ஆங்கிள செய்திப் பிரிவு

இந்தப் பிரிவு உதவிப் பணிப்பாளர் மற்றும் உதவித் தயாரிப்பாளர்கள் 02, தயாரிப்பு உதவியாளர்கள் ஐவரைக் கொண்டுள்ளது. தொடர்ச்சியாக சிங்கள செய்தித் தெரிவிப்பிற்காக வெளிநாட்டு செய்திகள் மற்றும் காட்சிகளை வழங்குவது இப்பிரிவின் பணியாகும். அவ்வாறே, ஏசியா விசன் செய்திப் பரிமாற்றப் பிரிவிற்கு நாட்டினுள் விசேடமான செய்திகள் வெளியிடுவது இப்பிரிவின் மேலுமொரு விசேட பணியாகும். 2021ஆம் ஆண்டு கொவிட் தொற்று ஏற்பட்ட நாளிலிருந்து தடுப்பூசி மற்றும் உலகம் இன்னும் சாதாரண நிலைக்கு வந்துள்ளமை தொடர்பில் நாளாந்த செய்தி அறிவுப்புக்களை இதுவரை அதன் தகவல்களை நாளாந்தம் செய்தித் தெரிவிப்பினூடாக பொதுமக்களை விழிப்புணர்வூட்டுதல். இதற்கு மேலதிகமாக, எல்லா நாட்களிலும் காலை 6.00 மணி முதல் 6.25 வரை நடப்பு மற்றும் சர்வதேச செய்திகளுக்காக "சிவ்தெச" நிகழ்ச்சியின் தயாரிப்புப் பணியும் இடம்பெற்றது.

பாகிஸ்தான் நாட்டின் பிரதமர் திரு. இம்ரான் கான் அவர்களின் இலங்கைக்கான வருகை தொடர்பான செய்திகள் தொகுப்பும் இப்பிரிவினாலே நிகழ்த்தப்பட்டது.

செய்தி ஊடகக் காட்சிப் பிரிவு

சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிளம் ஆகிய மும்மொழியிலுமான செய்தித் தெரிவிப்பின் போது, நாளா பக்கங்களிலிருந்தும் வெளிநாட்டு செய்தித் தெரிவிப்பு நிகழ்ச்சிகள் போன்றே, நடப்பு நிகழ்வுப் பிரிவின் நிகழ்ச்சிகளிலும் ஊடகக் காட்சித் தொகுப்பும் இப் பிரிவினூடாக நிகழ்த்தப்படுகின்றது. இவர்கள் பல்வேறு வேலை முறைக்கு இணங்க அதிகாலை 4.30 முதல் இரவு 10.30 வரை மேற்படி அலுவல்களில் ஈடுபடுகின்றார்கள். நடப்பு நிகழ்வுப் பிரிவின் "கரட்ட கர" போன்ற நேரடி நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்ற போது, இரவு சுமார் 12.30 வரையும் சேவையில் ஈடுபடுவது குறிப்பிடத்தக்க விடயமாகும். நிறுவனத்திலிருந்து வெளியேறி நாடெங்கிலும் எல்லா இடங்களிலுமிருந்து காட்சிகளை FTP தொழிநுட்பத்தினூடாக பெற்றுக் கொள்வதற்காக ஊடகக் காட்சியாளர்கள் செய்தி சேகரிப்பு நடவடிக்கைகளுக்காக இணைத்துக் கொள்ளப்படுகின்றார்கள். செய்தி பின்னணிக்கு உரியதான புதிய கருப்பொருள் தயாரிப்பு மற்றும் முன்னோட்ட விளம்பர அமைத்தல் போன்ற நிகழ்த்தப்படுகின்ற இந்தப்பிரிவில் 07 அதிகாரிகள் கடமையாற்றுகின்றனர்.

செய்தி இணையப் பிரிவு

இந்தப் பிரிவு பிரிவுத் தலைவர் மற்றும் இரண்டு அதிகாரிகளுடன் செயற்படுகின்றது. செய்திப் பிரிவின் உத்தியோக பூர்வ இணையத் தளம்,YouTube, Facebook பக்கங்களை செயற்படுத்தல் என்பன இப்பிரிவின் பணிகளாகும்.

பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற விஷேட அலுவல்கள்

2021ஆம் வருடம் கொரோனா தொற்று நோயின் கடுமையான தாக்கத்துடன் பணியாற்ற வேண்டி ஏற்பட்டதுடன், இங்கு விஞ்ஞான ரீதியாக சரியான தகவல்கள் அறிக்கைப்படுத்தப்பட்டன. மக்களிடையே எதிர்மறையான எண்ணங்கள் ஏற்படாத வன்னம் அரசினால் வழங்கப்படுகின்ற தகவல்கள் மற்றும் ஆலோசனைகளின் பிரகாரம் மாயைகளிலிருந்து நீங்கி செய்தி அறிவிப்பானது வெற்றிகரமாக இடம்பெற்றது. கொரோனா தொற்று ஏற்பட்ட போதிலும், செய்திப் பிரிவானது வழமை போன்றே அலுவல்களை மேற்கொண்டமை விசேடமாகக் குறிப்பிட வேண்டும்.

2021 ஆண்டு பிரதான செய்தி ஒளிபரப்பு 05 நாளாந்தம் ஒளிபரப்பப் பட்டது.

சிங்கள செய்தி	மதியம் 12.30 - இரவு 8.00
தமிழ் செய்தி	மதியம் 1.30 - இரவு 7.30
ஆங்கிளச் செய்தி	இரவு 9.00

நாட்டில் நிலவும் விசேட நிகழ்வுகள் அல்லது சந்தர்ப்பங்களில் விசேட செய்தி ஒளிபரப்பிற்காக மேலதிகக் காலத்தினை இணைத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

கொரோன தொற்றின் போதும், நிகழ்நிலையினூடாக இடம்பெற்ற உள்நாட்டு வெளிநாட்டு செயலமர்வுகளுக்கான அதிகாரிகள் இணைந்து கொண்டார்கள்.

செய்திப் பிரிவின் தயாரிப்பாளர்கள் ஆய்வுச் செய்தி, பாராளுமன்றச் செய்தி, சிறப்புச் செய்தி போன்ற பல்வேறு பிரிவின் கீழ் வகைப்படுத்தப்பட்டு சிறப்புச் செய்திகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கொவிட் 19 தொற்று மற்றும் தடுப்பூசி வழங்கல் தொடர்பான தகவல்களை சரியாக வழங்குதல்.

செய்தி அறிவிப்பிற்காக விண்ணப்பங்கள் அனுப்பியுள்ள பயிலுனர்களுக்காக திரைப் பரீட்சை நடாத்தப் பட்டன.

விசேடமாக செய்திப் பிரிவில் கணினி முறைமை மற்றும் சர்வர் முறைமை ஆரம்பிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் செய்திப் பிரிவு

2021ஆம் ஆண்டு கொரோன பரவலினால் ஊடகங்கள் நாம் மிகவும் அர்ப்பணிப்புடன் செய்திகளை முன்வைத்தோம். இதற்காக ஆளணியினரின் தாரளமான பங்களிப்பு கிடைக்கப் பெற்றது.

கொரோனா உச்சநிலையில் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் Braking News முன்வைக்கப்பட்டது.

கொரோனா விசேட செய்திகள் உள்ளடங்களாக பிரதான செய்தித் தயாரிப்புக்களில் நாம் இணைந்திருந்தோம். அதற்கு மேலதிகமாக விசேட கொரோனா தொடர்பான பொது மக்களை அறிவூட்டும் News Clip எம்மால் தயாரிக்கப்பட்டது.

நடப்பு நிகழ்வுப் பிரிவு

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் முன்னோடியான பணியில் இருக்கின்ற ஒரு பிரிவாக, நடப்பு நிகழ்வுகள் பிரிவினை அடையாளப்படுத்தலாம். சிங்களம், தமிழ் இரு மொழிகளையும் மையமாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உயிரூட்டுகின்றது. நாளாந்தம் வருகின்ற ஒளிப்பதிவு மற்றும் நேரடி நிகழ்ச்சிகளிடையே நீண்ட ஒலி அலைக்காலத்தை அர்த்தமுள்ளதாக நிரல்படுத்துவதற்கு நடப்பு நிகழ்வுப் பிரிவு செயற்படுகின்றது. சமூக நிகழ்வுகள் மற்றும் மனித உணர்ச்சிகள் போன்றே புதிய சமூக உந்துதல்கள்களுக்காக வேண்டி நடப்பு நிகழ்வுகள் பிரிவு தமது நிகழ்ச்சிகள் மூலம் ஆயிரக்கணக்கான பார்வையாளர்களை தம்வசம் ஈர்த்துள்ளனர்.

இப்பிரிவின் பிரதிப் பணிப்பாளர் (நடப்பு நிகழ்வு) கீழ் சிரேஷ்ட தயாரிப்பாளர்கள் இருவர் (02) உதவித் தயாரிப்பாளர்கள் அறுவர் (06), பெண் முகாமைத்து உதவியாளர் ஒருவர் (01) மற்றும் அலுவலக ஊழியார் ஒருவரும் (01) கடமையாற்றுகின்றனர்.

நடப்பு நிகழ்வுப் பிரிவின் மூலம் நிகழ்த்தப்படுகின்ற விசேட அலுவல்கள்

மேம்பாட்டு நிகழ்ச்சிகள், நிகழ்வு ஆய்வுகள், வெளியக மற்றும் உள்ளக மேம்பாட்டு நடவடிக்கைள் தொடர்பு படுத்தல் மற்றும் பிரிவின் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

எழுத்து ஊடகக் காட்சி கலைஞர்கள்

மேம்பாட்டு நிகழ்ச்சிகள், நிகழ்வு ஆய்வுகள், வெளியக மற்றும் உள்ளக மேம்பாட்டு நடவடிக்கைள் தொடர்பு படுத்தல் மற்றும் சித்திர வடிவமைப்பு தயாரித்தல்

முகாமைத்துவ உதவியாளர்

மேம்பாட்டு நிகழ்ச்சிகள், நிகழ்வு ஆய்வுகள், வெளியக மற்றும் உள்ளக மேம்பாட்டு நடவடிக்கைள் மேற்கொள்ளல். பிரிவின் ஆவணங்களை பராமரித்தல்.

விளம்பரம் மற்றும் ஊடகப் பிரிவு

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பொது மக்களிடையே விளம்பரப் படுத்துவதற்காக அச்சு ஊடகத்தினைப் பிரயோகித்து விளம்பர முறைமைகளை வெளியிடுதல் இந்தப் பிரிவின் அடிப்படை பொறுப்பாகும். இதன் மூலம் நிகழ்ச்சிகள் மற்றும் அலைவரிசை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை ஏற்படுத்துதல் மற்றும் விற்பனைப் பெறுமதியினை வழங்குவதற்கு உதவும் நோக்கிலாகும்.

நிறுவனத்தின் நிகழ்ச்சிகள் அடங்கிய இருவட்டுக்கள் விற்பனையினால் 151225.00, நென மிஹிர வினாப் பத்திர விற்பனை மூலம் 160000.000 வருமானத்தினை ஈட்டியுள்ளது.

பதவிப் பெயர்கள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை

பிரதிப் பணிப்பாளர் (விளம்பரம் மற்றும் ஊடகம்)	01
விளம்பரம் மற்றும் ஊடக அதிகாரி	01
எழுத்து மற்றும் ஊடகக் காட்சி கலைஞர்கள்	01

பணியின் தன்மைகள்

பிரதிப் பணிப்பாளர் (விளம்பரம் மற்றும் ஊடகம்)

நிகழ்ச்சிகள் விளம்பரத்திற்காக பத்திரிகை விளம்பரம், விளம்பரப் பதாதைகள் அமைத்தலை கண்காணிப்பு செய்தல். பத்திரிகை நிறுவனங்களுடன் இணைந்து தொடர்புகொள்தல் மற்றும் அந்த நிறுவனத்துடன் உள்ள மீள் வர்த்தக ஒப்பந்தங்களில் உரிய நடவடிக்கைகளை செயற்படுத்தல். கண்காணித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல். விற்பனைப் பிரிவிற்கு புறம்பாக விற்பனைப் பிரிவினால் ஏனைய பிரிகளின் அன்றாட நிருவாக நடவடிக்கைகளுக்கு பங்கேற்றல். ரூ என்டர்டேன்மன்ட்ட இல் கண்காணித்தல்.

விளம்பரம் மற்றும் ஊடக அதிகாரி

ரூ என்டர்டேன்மன்ட்டில் விற்பனை மையத்தில் விற்பனை நடவடிக்கைகள் கண்காணித்தல் /Biz News/Biz alk /சந்தகம் மஹ சமய போதனை நிகழ்ச்சிகள் மற்றும் ஏனைய நிறுவன மேம்பாட்டு மற்றும் விளம்பர நிகழ்ச்சிகளை தொடர்பு படுத்தல்.

எழுத்து மற்றும் ஊடகக் காட்சி கலைஞர்கள்

நிகழ்ச்சி விளம்பர்ததிற்காக பத்திரிகை அறிவித்தல், விளம்பரப் பதாதைகள் அமைத்தல் பத்திரிகை விளம்பர நடவடிக்கைகள் தேவையான செய்தி நிகழ்ச்சிகள் விபரங்களை கோப்புகளில் பராமரித்தில் மற்றும் பத்திரிகை நிறுவனங்களுடன் தொடர்பு மற்றும் பத்திரிகை நிறுவனத்துடன் மீள் வர்த்தக ஒப்பந்தங்களுக்கு உரிய நடவடிக்கைகள்.

விற்பனைப் பிரிவின் ரூ என்டர்டேன்மன்ட்டில் விற்பனை மையத்தின் பொது அறிமுகம்

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் ஒளிபரப்பாகிய பல்வேறு நிகழ்ச்சிகள் பல்வகைப்படுத்தி விற்பனை செய்தல் மற்றும் பரீட்சை வினாத் தாள்கள் விற்பனை செய்வதினூடாக கூட்டுத்தாபனத்திற்கு வருமானத்தினைப் பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கமாகும். பல்வகை கண்காட்சிகளின் போது ரூ என்டர்டேன்மன்ட் விற்பனை மையத்தில் வளாகத்தினை நிர்மானித்து அதன் மூலம் விற்பனை நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இதற்கு மேலதிகமாக நென மிஹிர வினாப் பத்திரங்களை நாடு பூராகவுமுள்ள புத்தக விற்பனை நிலையங்களுக்கும் கோரிக்கை விடுக்கின்ற நிறுவனத்திற்கு விநியோகித்தல் இடம்பெறுகின்றன. இதன் மூலம் விசேட வருமானத்தினை ஈட்டிக் கொள்ள முடியும்.

பதவிப் பெயர்கள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை

01. அலுவலக உதவியாளர் - 01

நிருவாகப் பிரிவு

விற்பனைப் பிரிவின் அதிகாரிகளின் விடுமுறை ஆவணங்கள் பராமரித்தல், மேலதிக நேரம், எரிபொருள் கொடுப்பனவு, நாளாந்த சம்பளக் கொடுப்பனவு,சார்புக் கொடுப்பனவு மற்றும் விற்பனை பிரிவின் நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல். இதற்காக வேண்டி பங்கேற்றல்.

பிரிவின் பதவிப் பெயர் மற்றும் சேவையாளர்களின் எண்ணிக்கை

நிருவாக அதிகாரி	01
சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர்	01

நிருவாகப் பிரிவு

கூட்டுத்தாபனத்தின் அனைத்து நிருவாக நடவடிக்கைகள் தலைவர், பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் கட்டளைகளின் கீழ் நிருவாக பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

நிருவாகப் பிரிவில் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிருவாகம்) கீழ் நிர்வகிக்கப் படுகின்றது.

நிருவாகப் பிரிவின் கீழ் உள்ள பிரிவுகள்

01. நிருவாகப் பிரிவு
02. வரவேற்புப் பிரிவு
03. ஆவணக் காப்பகம்
04. போக்குவரத்துப் பிரிவு
05. பாதுகாப்புப் பிரிவு
06. ஆய்வு மற்றும் பயிற்சிப் பிரிவு
07. சட்ட நிருவாகப் பிரிவு
08. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு – தலைவரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ்
09. நூலகம்
10. சர்வதேச தொடர்புப் பிரிவு

நிருவாகப் பிரிவின் நிறுவனக் கட்டமைப்பு

❖ பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிருவாகம்)

✓ பணிப்பாளர் (நிருவாகம்)

- உ.ப.(நி) 1 / பி.ப. (நிரு) / உ.ப.(நி) 111

  - செயலாளர்

- நி.உ.3 / நி.உ.2 / நி.உ.1

- முகாமைத்துவ உதவியாளர்04 / முகாமைத்துவ உதவியாளர்04 / முகாமைத்துவ உதவியாளர்04

  - அலுவலக உதவியாளர் 03

நிருவாகப் பிரிவு மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அலுவல்கள்

01. கூட்டுத்தாபனத்தின் அனைத்து அதிகாரிகளினதும், தனிப்பட்ட கோப்புக்களைப் பராமரித்தல்.
02. கூட்டுத்தாபனத்தின் ஆளணிக்காக புதிய அதிகாரிகளை சேவைக்கு இணைத்துக் கொள்ளல்
03. கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளின் பதவி உயர்வு-வருடாந்த சம்பள அதிகரிப்பு மற்றும் இடமாற்றங்களைப் பெற்றுக் கொடுத்தல்
04. வெகுசன ஊடக அமைச்சு உள்ளடங்களாக, வெளி நிறுவனங்களினால் கோருகின்ற தகவல்கள் மற்றும் அறிக்கைகள் வழங்குதல்
05. கூட்டுத்தாபனத்தின் அனைத்து விழா ஒழுங்குகளையும் மேற்கொள்ளுதல்.
06. கூட்டுத்தபான அதிகாரிகளின் ஒழுக்கக் கட்டுப்பாடு தொடர்பான கடமை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
07. வெளிநாட்டுப் பயிற்சிப் பாடநெறிகள், வெளிநாட்டு கருத்தரங்குகள், மாநாடுகள், கூட்டங்கள், கல்விச் சுற்றுலா, செயலமர்வுகள் தொடர்பில் அதிகாரிகளை ஈடுபடுத்துதல் மற்றும் அது தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
08. வெளி நிறுவனங்களில் (கல்வி மற்றும் தொழில்) மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்காக சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் அவர்களை தொடர்புடைய பிரிவுகளுக்கு அனுப்புதல்
09. கூட்டுத்தாபனத்தின் அனைத்து அதிகாரிகளினதும், விடுமுறை, திடீர் விபத்து விடுமுறை, பிரசவ விடுமுறை, விசேட மற்றும் உத்தியோகபூர்வ விடுமுறை, நாட்டிற்கு வெளியே தனிப்பட்ட மற்றும் உத்தியோகபூர்வ விடுமுறை தொடர்பான அலுவல்களை மேற்கொள்ளல்
10. கூட்டுத்தாபன அதிகாரிகளின் நலன்புரிக்காக மருத்துவக் காப்புறுதி வசதிகள் மற்றும் கடன் வசதிகள் வழங்குதல் உள்ளடங்களாக ஏனைய நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
11. கூட்டுத்தாபன அதிகாரிகளின் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் தொடர்பான கடமை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
12. உத்தியோகபூர்வ அடையாள அட்டை, சீருடைகளைப் பெற்றுக் கொடுத்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
13. கூட்டுத்தாபனத்தின் பல்வேறு பிரிவுகளுக்கும் குடிநீர் மற்றும் பத்திரிகைகளைக் கொண்டு வருதல் மற்றும் விநியோகம் செய்தல்.
14. கூட்டுத்தாபனத்தின் தொலைபேசி மற்றும் தபால் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2021ஆம் ஆண்டில் நிருவாகப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட அலுவல்கள்

1. கூட்டுத்தாபனத்தின் பிரிவுத் தலைவர்கள் உள்ளடங்களாக அனைத்து அதிகாரிகளுக்கும் சேவைப் பட்டியல் தயாரித்தல்
2. ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் காணியினை விடுகை கொடுப்பனவு பத்திரம் ஒன்றினூடாக கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைத்தல். அதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளல்.
3. கூட்டுத்தாபனசேவைக்கு இணைத்துக் கொள்ளல் விதிமுறைகளை புதுப்பித்தல் அதற்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளல்.

கோவிட் - 19 வைரசு நோய்ப் பரவலுடன்,நிருவாகப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட அலுவல்கள்

2020 மார்ச்சு மாதம் நிலவிய கோவிட் - 19 நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பாக இருந்த சந்தர்ப்பத்தில் அரசு முதற் கொண்டு இலத்திரனியல் ஊடக நிறுவனம் என்ற அடிப்படையில் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்க பாரிய பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது. நோயினைக் கட்டுப்படுத்துவதற்காக அரசினால் தொடர்ந்தும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் மக்களை அறிவூட்டுவதற்காக கோவிட் 19 நோய் பரவுதலை தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் தொடர்பாக மக்களை அறிவூட்டுதல்.

முன்னைய வருடம் முதல் நிலவிய கொவிட் - 19 வைரசு தொற்று நிலையினை கட்டுபடுத்தலுடன் 2021.03.09ஆந் திகதி முதல் கூட்டுத்தாபனத்தின் நாளாந்த நடவடிக்கைகள் மீள் நிலைக்கு திரும்பினாலும், நோய் நிலைமை மீண்டும் உச்சத்தினைத் தொட்டதினால் 2021.05.01ஆந் திகதி மீண்டும் கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் விசேட சேவை முறைமையின் கீழ் நிகழ்த்துவதற்கு செயற்படுத்தப்பட்டது. கோவிட்-19 வைரசு நிருவாகத்திற்காக விதிக்கப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தி நாட்டினை சாதாரன நிலைக்கு கொண்டு வந்ததினால், 2021.11.08ஆந் திகதி முதல் மீண்டும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் முன்பிருந்தவாறு சாதாரன நிலைக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்சொன்ன சந்தர்ப்பங்கள் இரண்டிலும் கூட்டுத்தாபனத்தின் நாளாந்த நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக வேண்டி தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் அவர்களது ஆலோசனைகளின் அடிப்படையில் நிருவாகப் பிரிவினால் எடுக்கப்பட்ட வழிமுறைகள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைந்தது.

- கூட்டுத்தாபனத்தின் முக்கியமான அலுவல்களை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக கூட்டுத்தாபானத்தின் பல்வேறு பிரிவுகளில் விசேட வேலை முறை அடிப்படையில் அதிகாரிகளை சேவைக்கு இணைத்துக் கொள்வதற்காக வேலை முறை அமைப்பதற்குத் தேவையான ஒருங்கமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- பொதுப் போக்குவரத்து சேவைகள் முறையாக இடம்பெறாத நிலைமையொன்றின் கீழ் சேவைக்கு சமுகம் தந்த அதிகாரிகளுக்காக கூட்டுத்தாபனத்தின் போக்குவரத்துப் பிரிவினூடாக விசேட போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக செயற்படுதல்.

- சேவைக்கு சமுகந் தந்த கூட்டுத்தாபன அதிகாரிகளின் சுகாதாரப் பாதுகாப்பிற்காக வேண்டி தேவையான வழிமுறைகளை மேற்கொள்ளல். (அதிகாரிகளை தெளிவு படுத்தல், முகக் கவசங்களை வழங்குதல், கிருமித் தொற்று நீக்க திரவங்களை வழங்குதல் போன்றன.)

- வெகுசன ஊடக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பூசி வழங்கும் நிகழ்ச்சிகளின் கீழ் கூட்டுத்தாபனத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் சேவைக்கு அழைக்க வேண்டிய அதிகாரிகளுக்கு தடுப்பூசிகளை வழங்குவதற்குத் தேவையான தொடர்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

2021வருட இறுதியில் சேவையாளர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள்

2021.12.31 ஆந் திகதிக்கு சேவையாளர் எண்ணிக்கை

சேவை அடிப்படை	சேவையாளர்களின் எண்ணிக்கை
நிரந்தர ஆளணிக் குழு	830
ஒப்பந்த அடிப்படையிலான ஆளணிக்குழு	18
சேவை ஒதுக்கீட்டு ஆளணியினர்	14
மொத்த சேவையாளர்களின் எண்ணிக்கை	8 62

அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர்

அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர சேவையாளர்கள் எண்ணிக்கை	1041
அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த சேவையாளர்களின் எண்ணிக்கை	8
அங்கீகரிக்கப்பட்ட மொத்த சேவையாளர்களின் எண்ணிக்கை	1049

2021ஆம் ஆண்டில் புதிதாய் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள்.

நிரந்தர அடிப்படையில்	01
ஒப்பந்த அடிப்படையில்	01
சேவை ஒதுக்கீடு 0	7
மொத்த ஆட்சேர்ப்பு 0	9

2021ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றோர் தொடர்பான தகவல்கள்

2021ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற அதிகாரிகளின் எண்ணிக்கை	30

காப்புறுதி நலன்கள்

2021ஆம் ஆண்டில் ஜனவரி 01 முதல் டிசம்பர் 31 வரை செயற்படுத்தப்பட்டது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட வைத்தியக் காப்புறுதி, தீ காப்புறுதி மற்றும் அனைத்துப் பாதுகாப்புக் காப்புறுதி முறைமைகளாகும்.

இதன் மூலம்,

- ❖ வைத்தியசாலை மற்றும் சத்திர சிகிக்கை காப்புறுதி (தங்குமிட வைத்தியப் பற்றுச் சீட்டுக்கள், வெளியக வைத்தியசாலை பற்றுச் சீட்டுக்கள், மூக்குக் கண்ணாடிப் பற்றுச் சீட்டுக்கள்)
- ❖ கடுமையான நோயாளர் காப்புறுதி
- ❖ திடீர் விபத்துக் காப்புறுதி
- ❖ தீ காப்புறுதி மற்றும் அனைத்துப் பாதுகாப்புக் காப்புறுதி போன்ற துறைகள் உள்ளடக்கப்படுகின்றன.

2021ஆம் ஆண்டில் இந்தக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் கலந்து கொண்ட வெளிநாட்டு உத்தியோகபூர்வ விஜயங்கள்

அரச தலைவர்கள் உத்தியோகபூர்வ பயணங்கள் தொடர்பான செய்தி சேகரிப்பு மற்றும் வேறு ஊடக சேகரிப்பு நடவடிக்கைகளுக்காக இந்த வருடத்தினுள், 73575.00 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டில் இடம்பெற்ற பண்டிகைகள் மற்றும் ஆண்டு விழாக்கள்.

- ✓ 2021ஆம் ஆண்டில் இடம்பெற்ற ரூபவாஹினியின் 39ஆவது ஆண்டு நிறைவிற்காக இடம்பெற்ற பிரித் அன்னதானம் மற்றும் புன்னிய அன்னதாம் பெப்பரவி 14, 15ஆந் திகதிகளில் இடம்பெற்றது.

சட்ட நிருவாகப் பிரிவு

கூட்டுத்தபான நிறுவனத் திட்டத்தின் பிரகாரம் சட்ட நிருவாகப் பிரிவு கூட்டுத்தாபனத்தின் நிருவாகப் பிரிவின் கீழ் செயற்படுகின்ற ஒரு பிரிவாகும். இந்தப் பிரிவு ஏனைய காரணங்களுடன் பிரதானமாக கூட்டுத்தாபனத்தினால் வெளியக வாடிக்கையாளர்கள் போன்றே, உள்ளக சேவையாளர்களுடன் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களின் போது உரிய ஒப்பந்தங்களை அமைத்துக் கொண்டு அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே, பல்வேறு நீதி மன்றங்களில் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக மற்றும் கூட்டுத் தாபனத்திற்கு பொறுப்பளிக்கப்பட்ட சட்ட செயல்பாடுகளுக்கு கூட்டுத்தாபனத்திற்காக அனைத்து நீதி மன்றங்கள், மேல் முறையீட்டு நீதி மன்றங்கள், ஆணைக் குழுக்கள் முன்னிலையில் ஆஜாராகுதல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் உயர்

முகாமைத்துவத்திற்குத் தேவையான சட்ட ஆலோசனைகள் வழங்குதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் பிரகாரம் 2021ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியாகும் போது வாடிக்கையாளர் கடனாளிகள் 33 பேருக்காக வேண்டி ரூபா. 5703956.51 நிதியினை அறவிட்டுக் கொள்வதற்காக வேண்டி சந்தைப் படுத்தல் பிரிவினால் சட்டப் பிரிவிற்கு அனுப்பியிருந்ததுடன்,அவற்றில் வாடிக்கையாளரின் பிரதிநிதித்துவ நிறுவனங்கள் 29 இற்கு ரூபா. 43356006.74 அறவிட்டுக் கொள்ள நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் 2020ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியாகும் போது ரூபா. 6751958.29 நிதி அறவிடப்பட்டுள்ளது. மேலும் இதில் வழக்காளிகள் இருவர் (06) 2021ஆம் ஆண்டில் தீர்வுக்கு வந்தனர். அத்துடன் அந்த தீர்வுக்கு உரித்தான கட்சிக்காரர்களினால் பணம் செலுத்தி எடுத்துச் செல்லப்படும்.

அவ்வாறே இந்த கூட்டுத்தாபனத்தினால் பணியாளர்களுக்கு அல்லது வெளி நபர்களுக்கு எதிராக ரூபா. 11,191,484.17 அறவிட்டுக் கொள்வதற்காக 02 வழக்குகள் தொடரப்பட்டுள்ளதுடன், அந்த இரண்டு (02) வழக்குகளும் இன்னும் விசாரணைக்குற்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும் இந்த கூட்டுத்தாபனத்திற்கு எதிராக பணியாளர்களினால் அல்லது 17 வெளி நபர்களினால் பல்வேறு நீதிமன்றங்களில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. அந்த வழக்குகள் 2021.12.31ஆந் திகதி முடிவுறும் போது உயர்நீதிமன்றத்தின் முன் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த அடிப்படை உரிமை முறைப்பாடுகள் 2 உம் முடிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 2021.12.31ஆந் திகதியாகும் போது 02 வழக்குகள் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக விசாரிக்கப்பட்டு வருகின்றது.

நூலகம்

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நூலகமானது பிரதான நூலகரின் கீழ் செயற்படுத்தப் படுகின்றது. இவை காட்சிகள், நாடாக்கள் மற்றும் புத்தகங்கள் என 03 பிரிவுகளைக் கொண்டுள்ளது. இங்கு அங்கீகரிக்கப்பட்ட சேவையாளர்களின் எண்ணிக்கை மதிப்பீட்டின் படி நூலகத்தின் ஆளணியினர்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைகின்றது.

- பிரதான நூலகர் (MM 1/1) பதவிகள் - (01)
- நூலகர்(JM 1/1) பதவிகள் - (03)
- உதவி நூலகர் (JM 1/1) பதவிகள் - (02)

- சிரேஷ்ட நூலகர் உதவி மற்றும் நூலக உதவியாளர் (முகாமைத்துவ உதவியாளர்) (MA 1/2) பதவிகள் - (03)
- அலுவலக உதவியாளர்(PL/3) பதவிகள் - (04)

என்றாலும், தற்போது பிரதான நூலகர் மற்றும் ஜே. நூலக உதவியாளர்கள் 04 (நான்கு) பேர், 02 நூலக உதவியாளர்கள்,ஜே. முகாமைத்துவ பெண் உதவியளார் ஒருவர் முகாமைத்துவ உதவியாளர்கள் 02 இருவர், ஜே. அலுவலக உதவியாளர் 02 இருவர் மற்றும் அலுவலக உதவியாளர் உள்ளடங்களாக ஆளணிச் சபையில் மொத்தம் 13 நபர்களும் உள்ளன.

நூலகம் நிருவாகப் பிரிவின் கீழ் உள்ள பிரிவொன்றாக கடமைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கூட்டுத்தாபனத்தின் தயாரிப்புச் செயற்பாட்டிற்கு சேவைகளை வழங்குவதற்காக நூலகம் பாரிய பணியொன்றினை ஆற்றி வருகின்றது. இதன் பிரகாரம் பல்வேறு தேவைப்பாடுகளின் கீழ் நிகழ்ச்சித் தயாரிப்பிலிருந்து ஒளிபரப்புச் செய்யப்பட்டு பாதுகாத்து வைக்கும் வரையான அனைத்து செயற்பாடுகளும் இதனுள் உள்ளடங்கும்.

ரூபவாஹினி நூலகம் சாதாரண நூலகத்திலும் பார்க்க சிறப்பு மிக்கது. அந்த சிறப்புத் தன்மைக்குக் காரணம் அங்கு செயற்படுத்தப்பட்டு வருகின்ற தகவல் அச்சு மற்றும் ஒளி ஒலி போன்ற ஊடகங்கள் இரண்டிலும் தயாரிப்பு நடவடிக்கைகளுக்கு பங்களிப்புச் செய்வதும் விசேடமாக ஒளி ஒலி ஊடகங்களில் தகவல்களை வழங்குவதும் நூலகமாகும்.

2021ஆம் ஆண்டின் திட்டங்கள்

- திருத்தப்படாத காட்சிகள் மற்றும் காப்பகப்படுத்தப்பட்ட செய்திகளை Digital தொழில்நுட்பத்திற்கு பிரதி செய்து விசேடமாக செய்தி தயாரிப்பிற்காக online தொழில் நுட்பத்தினூடாக செய்திப் பிரிவுக்கு வழங்குதல். (uploading news items & visuals to the news room link)
- கொரிய அரசினால் வழங்கப்படுகின்ற RAPA (RAPA – Radio Promotion Association of Korea) கீழ் நாளாந்தம் ஒளிபரப்பாகின்ற அனைத்து நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்பதற்காக பிரதி செய்தல் முறைமை உள்ளடங்கும் வன்னம் தற்போதும் மிகவும் வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- பீடா ஊடகத்தில் இடம்பெற்ற காப்பகப் படுத்த வேண்டிய பல நிகழச்சிகள் தற்போது XD Camதொழில் நுட்பத்தின் கீழ் பிரதி செய்யப்பட்டு பாதுகாப்பிற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

- நூலகத்தில் புத்தகங்கள் தொடர்பான தகவல்கள் கணினி முறைமை தரவுத் தளத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தொடர்பு மற்றும் நலன்புரிப் பிரிவு

கூட்டுத்தாபனத்தினால் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல் போன்றே, உயர் முகாமைத்துவ அதிகாரிகளை சந்திக்க வருகின்ற பார்வையாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு அந்த அலுவல்களை இலகுவில் செய்து கொள்வதற்காக வேண்டித் தேவையான உதவிகளை வழங்குதல். கூட்டுத்தாபன மற்றும் வெளி நபர்கள், நிறுவனங்களுடன் ஒருங்கிணைதல்

பதவிப் பெயர்

01. பிரதிப் பணிப்பாளர் (பொது மக்கள் தொடர்பு)
02. வரவேற்பு அதிகாரிகள்

பிரதிப் பணிப்பாளர் பொது மக்கள் தொடர்பு மற்றும் நலன்புரி

கூட்டுத்தாபனம் மற்றும் வெளி நபர்களுடனான தொடர்புகள். கூட்டுத்தாபன பணியாளர்களின் நலன்புரி நடவடிக்கைகள்

வரவேற்பு அதிகாரிகள்

நிறுவனத்திற்கு வருகின்ற அதிதிகள், நிகழ்ச்சிகளுக்கு பங்கேற்க வருகின்றவர்கள், மதகுருக்களை வரவேற்று அவர்களது அலுவல்களை இலகு படுத்தல்.

போக்குவரத்துப் பிரிவு

போக்குவரத்துப் பிரிவின் பிரதான அலுவலாக அமைவது, நாளாந்தம் கிடைக்கப் பெறுகின்ற போக்குவரத்து விண்ணப்பங்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குதல். (ஜனாதிபதியின் செய்தி சேகரிப்பு, பிரதம மந்திரியின் செய்தி சேகரிப்பு, மற்றும் வெளிக்கள ஒளிபரப்பு அலுவல்கள் உள்ளடங்களாக)

இதற்கு மேலதிகமாக வாகனங்கள் பழுது பார்த்தல், எரிபொருள் நிரப்புதல், காப்பீடு செய்தல், பதிவு செய்தல், வாகன விபத்துக்களை சரிசெய்தல் மற்றும் இழப்பீடுகளை பெற்றுக் கொள்ளுதல் தொடர்பான அலுவல்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட 12 வாகனங்களுக்கான அலுவல்கள் எமது பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

போக்குவரத்துப் பிரிவின் ஆளணிச் சபை பின்வருமாறு

பதவிகள்	அதிகாரிகளின் எண்ணிக்கை
போக்குவரத்து அதிகாரி	01
முகாமைத்துவ உதவியாளர்	01
மோட்டார் தொழில் நுட்பவியலாளர்	02
வேல்டர்	01
சிரேஷ்ட சாரதிகள்	13
சாரதிகள்	25

போக்குவரத்துப் பிரிவில் உள்ள வாகனங்கள் தொடர்பான விபரம்

வாகனத்தின் வகைகள்	எரிபொருள் வகை	
	பெட்ரல்	டீசல்
மோட்டார் வாகனம்	06	
ஜீப் வண்டி		01
பஸ் வண்டி		01
வேன்		17
டபள் கெப்		01
ஓபி பஸ் வண்டி		02
க்ரு கெப்		05
லொறி		01
மினி ஓபி வேன்		01
ஸ்லோமோசன் பஸ்		01
மொத்தம்		36

வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட வாகனங்கள்

01. செய்திப் பிரிவிற்காகவும் வர்த்தகப் பிரிவிற்காகவும் 10 வேன்கள்
02. தெனியாய மற்றும் பிந்துரு தலாகலை ஒளிபரப்புக் கலையங்களில் பணிக்காக 02 டபள் கெப் வாகனம்

2021 இல் மேற்கொள்ளப்பட்ட விசேட அலுவல்கள்

2020.03.20ஆந் திகதியின் பின்னர் கொரோனா தொற்றின் காரணமாக விசேட சேவை முறையொன்றினை அமைத்தல் அடிப்படையில் சேவைக்கு சமுகமளித்த சாரதிகள் இணைத்துக் கொண்டு கூட்டுத்தாபன அதிகாரிகளை சேவைக்கு அழைத்து வரப்பட்டு மீண்டும் வீடு நோக்கிச் செல்வதற்கான விசேட போக்குவரத்து வசதிகளை வழங்கி கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடடிவக்கைகளுக்கு தடையின்றி தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு விசேட பணியொன்றினை ஆற்றினார்கள்.

பாதுகாப்புப் பிரிவு

தனியார் பாதுகாப்புப் பிரிவு மற்றும் கூட்டுத்தாபன பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளின் சேவைகளைப் பெற்றுக் கொண்டு ஒரு நாளின் 24 மணித்தியாலயங்களும் நிறுவனத்தின் சொத்துக்களை கூட்டுத்தாபனத்தின் ஆளணிச் சபைகளை பாதுகாத்தல் மற்றும் நிறுவனத்தின் ஒழுக்கத்தை செயற்படுத்திச் செல்வதே எமது பிரவின் அலுவலாகும்.

2020 ஆம் ஆண்டு தனியார் பாதுகாப்புக் பிரிவினை பொறுப்பேற்று செயற்பட்ட ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்தினாலே 2021.02.28ஆந் திகதி முதல் சேவை வழங்கப்பட்டது.

உள்ளகக்கணக்காய்வு பிரிவு

நிறுவனத் தலைவரின் நேரடிகண்காணிப்பின் கீழ் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுசெயற்படுகின்றது. கணக்குமற்றும் உள்ளகநிருவாகமுறைமைப் பகுப்பாய்வுசெய்தல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பானகுறைபாடுகள் உள்ளநிலைமைதொடர்பாகஉரியபிரிவின் தலைவர்களுக்குஉள்ளகக் கணக்காய்வுவிசாரணைகளைமுன்வைத்தல். மேலும்,தொடர்ந்தும் தேவையானசந்தர்ப்பங்களில் முன்னேற்றுதல் மற்றும் நிலவுகின்றநிலைப்பாடுதொடர்பாகஉயர் முகாமைத்துவத்திடம் அறிக்கைப் படுத்தல் மற்றும் உள்ளகக்கணக்காய்வுபிரிவின் பிரதானஅலுவலாகும்.

2021ஆம் ஆண்டிற்காகஅமைக்கப்பட்டுள்ளஉள்ளகக் கணக்காய்வுநிகழ்ச்சிகளை, இருக்கின்றமனிதவளம் மற்றும் பௌதீகவளங்களைப் பயன்படுத்திநிலவுகின்றநேரகாலங்களுக்குஅமைவாகமுழுமையாகமற்றும் மாதிரிஅடிப்படையில் ஆராய்ந்துநிருவாகஅதிகாரிக்குஅறிக்கைப் படுத்தப்பட்டுவருகிறது.

2021ஆம் ஆண்டினுள் 03 கணக்காய்வுமற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் இடம்பெற்றுள்ளது.

ஆய்வு மற்றும் பயிற்சிப் பிரிவு

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நோக்கு மற்றும் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்திற்கு உரியதான தயாரிப்புகள், பொறியியலாளர், மனித வளங்கள் முகாமைத்துவம் உள்ளடங்களாக பல்வேறு துறை சம்பந்தமான நோக்கினை அடைந்து கொள்வதற்குத் தேவையான ஆய்வு மற்றும் பயிற்சிகள் மேற்கெள்வது இப்பிரிவின் முக்கிய அலுவலாக கண்டறியப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவு பிரதிப் பணிப்பாளர், பிரிவுத் தலைவர் மற்றும் 4 ஆய்வு அதிகாரிகளைக் கொண்டமைந்துள்ளதுடன், ஒரு அலுவலக உதவியாளரும் சேவையில் ஈடுபடுகிறார்.

2021ஆம் ஆண்டினுள் மேற்கொண்ட பயிற்சி நிகழ்ச்சிகள்

2021ஆம் ஆண்டினுள் பல்கலைக்கழக, தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் ஏனைய வெளிவாரி கல்வி நிறுவனங்களினால் 35 மாணவர்களுக்காக ஆய்வு மற்றும் பயிற்சிப் பிரிவின் கண்காணிப்பின் கீழ் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு பிரிவுகளில் பயிற்சி வழங்கப்பட்டது.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

கூட்டுத்தாபனத் தலைவரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் உள்ளக் கணக்காய்வுப் பிரிவு செயற்படுகின்றது. கணக்கு மற்றும் உள்ளக நிருவாக முறைமை மதிப்பாய்வு செய்தல், அவற்றின் செயற்பாடு, இயக்கம் தொடர்பான குறைகள் பற்றிய நிலைமை தொடர்பாக உரிய பிரிவின் தலைவர்களுக்கு உள்ளகக் கணக்காய்வு விசாரனைகளை முன்வைத்தல், தொடர்ந்தும் தேவையான சந்தர்ப்பங்களில் முன்னேற்றுதல் மற்றும் நிலவுகின்ற நிலைமை தொடர்பாக உயர் முகாமைத்துவத்திற்கு அறிக்கைப் படுத்தல் என்பன உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பிரதான அலுவலாகும்.

பிரிவின் பதவிப் பெயர்கள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை

கணக்காய்வு உதவியாளர்01
முகாமைத்துவ உதவியாளர் 03

2020ஆண்டிற்காக அமைக்கப்பட்ட கணக்காய்வு நிகழ்ச்சிகள், நிலவுகின்ற மனிதவள மற்றும் பௌதீக வளங்களைப் பிரயோகித்து நிலவுகின்ற கால நேரங்களின் பிரகாரம் முழுமையாக மற்றும் மாதிரிகளாக பரிசோதனை செய்து நிருவாகத்திற்கு அறிக்கைப் படுத்தப்பட்டுள்ளன.

2021ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பட்ட கண்காணிப்புகள் மற்றும் ஆய்வுகள்

- தேசிய ரூபவாஹினி உள்ளடங்களாக ஏனைய அலைவரிசைகள் நிலவும் நேயர்களின் ஆதரவினை ஆராய்ந்து பார்ப்பதற்காக ஆய்வொன்று 2021 ஆகஸ்ட் மாதம் இடம்பெற்றது.

- இரவு 7-7.30 வரையான காலப் பகுதியில் ஒவ்வொரு அலைவரிசையிலும் நிலவும் நேயர்களின் ஆதரவு தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்காக ஆய்வொன்று நடாத்தியது. (சகல குரு 2 தொலைக்காட்சி நாடகம் ஒளிபரப்பாகிய காலப் பகுதியினை அடிப்படையாகக் கொண்டு 2021 டிசம்பர் மாதம்)

2021ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பட்ட பயிற்சிப் பாடநெறிகள்

- ரூபவாஹினி நிகழ்ச்சிகள் மற்றும் செய்திகளை முன்வைத்தல் தொடர்பான ஆறு மாத கால சான்றிதழ் பாடநெறி நடாத்துதல் (வெளி நபர்களுக்காக) இந்தப் பாடநெறி மூலம் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா. 8755000.00 ஈட்டித் தந்தது.

- ரூபவாஹினி கெமரா மற்றும் ஒளி வழங்கல் தொடர்பான ஆறு மாத கால சான்றிதழ் கற்கைநெறி நடாத்துதல் (வெளி நபர்களுக்காக) இந்தப் பாடநெறியினால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா. 3040000.00 நிதி ஈட்டித் தந்தது.

ரூபவாஹினி (அலைவரிசை – 1)

2021ஆம் ஆண்டில் ரூபவாஹினியின் மொத்த ஒளிபரப்புக் காலம் வழக்கமான நிகழ்ச்சிகள் மணித்தியாலயங்களில் 5831.4% உம் மற்றும் வர்த்தக விளம்பர மணித்தியாலயங்களில்500.6% வீதத்தினைக் கொண்டமைந்திருந்தது.

அட்டவணை - 01

ஆண்டு	நிகழ்ச்சி நேரம் (மணித்தியாலயம்)	%	வர்த்தக விளம்பர நேரம் (மணித்தியாலயம்)	%	மொத்த மணித்தியாலயங்கள்
2020	5915.4	93.4	420.5	6.6	**6335.9**
2021	5831.4	92.1	500.6	7.9	**6332**

விளம்பர ஒளிபரப்புக் காலம்

2021ஆம் ஆண்டினுள் 500.6 மணித்தியாலயங்கள் விளம்பரங்கள் ஒளிபரப்பப்பட்டன. முன்னைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் இந்த விகிதாசாரம் 7.3% இலிருந்து 6.8% ஆக குறைந்து காணப்படுகின்றது.

அட்டவணை - 02

ஆண்டு	விளம்பர நிலையங்கள்	%	அநுசரணையுடன்	%	அநுசரணை இல்லாமல்	%	மொத்தம்
2020	325.6	77.4	64.4	15.3	30.5	7.3	**420.5**
2021	389.9	77.9	76.5	15.3	34.2	6.8	**500.6**

மொழிக்கு ஏற்ப திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிகள் (மணித்தியாலயங்கள்)

கடந்த இரண்டு வருட காலத்தினுள் மொழி ரீதியாக நிகழ்ச்சி நிரல்படுத்தப்பட்ட விகிதாசாரம் கீழ் வருமாறு அமைந்திருந்தது.

அட்டவணை - 03

ஆண்டு	சிங்களம் (மணித்தியாலயம்)	%	ஆங்கிலம் (மணித்தியாலயம்)	%	தமிழ் (மணித்தியாலயம்)	%	ஏனையவை (மணித்தியாலயம்)	%	மொத்தம்
2020	5550.7	93.8	271.2	4.6	2.4	0.0	91.1	1.5	5915.4

அனுசரனையாளர்கள் அடிப்படையில் நிகழ்சிகள் (%)

2021ஆம் ஆண்டில் 2195.1 (37.61%) மணித்தியாலயங்கள் அனுசரனை நிகழ்ச்சிகளாக இருந்ததுடன்,5831.4 மணித்தியாலய நிகழ்ச்சிகள் ரூபவாஹினி ஒளிபரப்புக் காலத்தில் ஒளிபரப்பப்பட்டவை.

அட்டவணை - 04

வகைகள்	2020	%	2020	%
அனுசரனை நிகழ்ச்சிகள்	2109.1	35.7	2195.1	37.6
அனுசரனை அல்லாத நிகழ்ச்சிகள்	3806.3	64.3	3636.3	62.4

நிகழ்ச்சி வகைகளுக்கு ஏற்ப - இ.ரூ.கூ.தா ஒளிபரப்புக்கால நேரப்பகுப்பாய்வு

அட்டவணை – 05

நிகழ்ச்சி வகைகள்	2020 மணித்தியாலயங்கள்	2020 (%)	2021 மணித்தியாலயங்கள்	2021(%)
தகவல் நிகழ்ச்சிகள்				
செய்திகள்	750.1	12.7	643.8	11
அரசியல்	234.5	4	167.2	2.9
வர்த்தகம்	7.6	0.1	7.0	0.1
சமூகம்	285.8	4.8	298.5	5.1

ஆயுபோவன்	146.5	2.5	169.6	2.9
	1424.5	**24.1**	1286.1	22
கல்வி நிகழ்ச்சிகள்				
கல்வி	401.5	6.8	**408.3**	**7.0**
ஆவண	252.8	4.3	**212.8**	**3.6**
விவசாயம்	88.9	1.5	**79.2**	**1.4**
வினா விடை	-	-	**0.6**	**-**
சஞ்சிகை	275.2	4.7	**395.5**	**6.8**
	1018.4	**17.3**	**1096.4**	**18.8**
சிறுவர் நிகழ்ச்சிகள்				
சிறுவர்கள்	267.2	4.5	262.4	4.5
காட்டூன்	125.9	2.1	84.1	1.4
	393.1	**6.6**	346.5	5.0
மகளிர் நிகழ்ச்சிகள்				
நுகசெவன	496	8.4	**530.2**	**9.1**
	496	**8.4**	**530.2**	**9.1**
கலாசாரம் மற்றும் சமய நிகழ்ச்சிகள்				
கலாசாரம்	43.8	0.7	**59.2**	**1.0**
சமயம்	372.6	6.3	**377.5**	**6.5**
	416.4	**7.0**	**436.7**	**7.5**
பொழுது போக்கு நிகழ்ச்சிகள்				
நாடகம்	512	8.7	590.4	10.1
தொடர் நாடகம்	341.8	5.8	316.7	6.2
திரைப்படங்கள்	238.5	4	105.2	1.8
இசை	637.3	10.8	750.8	12.9
பல்சுவை	67.6	1.1	31.5	0.5
நகைச்சுவை	12.2	0.2	26.7	0.5
	1809.4	**30.6**	1866.3	32

விளையாட்டு நிகழ்ச்சிகள் விளையாட்டு	31.1 **31.1**	0.5 **0.5**	**67** **67**	**1.1** **1.1**
விளம்பர நிகழ்ச்சிகள் விளம்பரம் லாட்டரி	37.4 259.8 **297.2**	0.6 4.4 **5.0**	**34.8** **139.2** **174**	**0.6** **2.4** **3.0**
ஏனைய நிகழ்ச்சிகள் ஏனையவைகள்	29.3 **29.3**	0.5 **0.5**	**28.2** **28.2**	**0.5** **0.5**
மொத்தம்	**5915.4**	**100**	**5831.4**	**100**

பின்வரும் நான்கு முக்கிய வகைகளில் மீள் தொகுப்பட்ட இருபத்து நான்கு நிகழ்ச்சி வகைகள் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அட்டவணை – 06

நிகழ்ச்சிகள்	**2020 மணித்தியாலயங்கள்**	**2020 (%)**	**2021மணித்தியாலயங்கள்**	**2021 (%)**
தகவல் நிகழ்ச்சிகள்	1424.5	24.1	1286.1	22
கல்வி நிகழ்ச்சிகள்	1018.4	17.3	1096	18.8
பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்	3443.2	58.2	3420.7	58.6
ஏனைய நிகழ்ச்சிகள்	29.3	0.5	28.2	0.5
மொத்தம்	**5915.4**	**100**	**5831.4**	**100**

ஐ /நேத்ராTV அலைவரிசை இரண்டிலும் வானொலிக் காலப் பகுப்பாய்வு

ஜனவரி	31	628.5
பெப்ரவரி	28	57.4
மார்ச்சு	31	635.5
ஏப்ரல்	30	615
மே	31	628.5
ஜூன்	30	585
ஜூலை	31	604.5
ஆகஸ்ட்	31	604.5
செப்டம்பர்	30	585
ஒக்டோபர்	31	604.5
நவம்பர்	30	585
டிசம்பர்	31	604.5
		7254.5

சிவில் பொறியியல் பிரிவு

பொதுவான பணிகள்

- கூட்டுத்தாபனத்தின் அன்றாட பராமரிப்பு பணி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- கூட்டுத்தாபானத்தின் கலையக வளாகத்தில் புதுப்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் மற்றும் பிரதேச ஒளிபரப்பு நிலையங்களை பராமரித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

விசேட பணிகள்

செய்திப் பரிவினை மாற்றியமைத்தல் மற்றும் வேறாக்குதல் (Partition)

சர்வதேச உறவுகள் பிரிவு

சர்வதேச உறவுகள் பிரிவு (International Relation Unit)நிருவாகப் பிரிவின் கீழ் செயற்படுவதுடன், அதன் பிரிவுத் தலைவர் (Unit Head)மற்றும் ஆய்வு அதிகாரி (Research Officers)இருவர் மற்றும் தற்காலிக ஒரு வருட காலத்திற்காக இணைத்துக் கொள்ளப்பட்ட உதவி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் (Assistant Producer)உள்ளனர்.

சர்வதேச உறவுகள் பிரிவின் அடிப்படை அலுவலாக அமைவது இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அடிப்படையில் அமைந்துள்ள சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புபடுவதாகும். அந்த நிறுவனங்கள் மற்றும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையேயான தொடர்பு நடவடிக்கைகளும் தொடர்பாடல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல். இதன் மூலம் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு பல்வேறு நன்மைகள் பெற்றுக் கொள்ளல். உதாரணத்திற்கு இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் அனைத்து தொழிலாளர்களுக்கும் சர்வதேச அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பில்லா நிறுவனங்களினால் கிடைக்கப் பெறுகின்ற வெளிநாட்டு புலமைப் பரிசில்கள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் போன்றவற்றிற்காக தகைமையானவர்களை தெரிவு செய்து அனுப்பும் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை சர்வதேச உறவுகள் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.அவ்வாறே, சர்வதேசத்தில் நிலவுகின்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி விழாக்களுக்காக பொருத்தமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தெரிவு செய்து அனுப்பும் செயற்பாட்டினை சர்வதேச உறவுகள் பிரிவினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக தேசிய ரீதியாக நிலவுகின்ற சர்வதேச அரச அமைப்புக்கள் (தூதுவராலயங்கள்) மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு தொலைக்காட்சித் துறைக்குரியதான நடவடிக்கைகள் மேற்கொள்வதும், சர்வதேச உறவுகள் பிரிவின் அலுவலாகும்.

பிரிவில் கடமையாற்றும் அதிகாரிகள்

- நிகழ்ச்சித் தயாரிப்பாளர் - பிரிவுத் தலைவர்
- ஆய்வு அதிகாரிகள்
- ஆய்வு அதிகாரிகள்
- உதவித் தயாரிப்பாளர்

பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள்

எமது பிரிவினால், 2021ஆம் ஆண்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 48 திட்டங்களுக்கும் மேலதிகமாக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கோவிட் தொற்றின் காரணமாக சர்வதேச தொடர்புகள் பிரிவிற்கு முன்னைய வருடங்களிலும் பார்க்க திட்டங்கள் குறைந்த அளிவிலே மேற்கொள்ள முடிந்தது. விசேடமாக கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் கலந்து கொள்ளவிருந்த பல சந்தர்ப்பங்கள் கோவிட் தொற்றுக் காரணமாக இரத்து செய்யப்பட்டது. ஒரு சில நிகழ்நிலை (online) முறையில் இடம்பெற்றன.

	திட்டங்கள்	நாடு	விபரம்
1.	JICA KnowledgeCo creationprogramme (Webinar)	ஜப்பான்	ஜப்பான் அரசின் நிகழ்ச்சியாகும். இது இலங்கை ஜப்பான் புரிந்துணர்வு நட்பு நிறுவனத்தினால் ஒருங்கிணைப்பு செய்யப்படுகின்றது. ஜூட், லசந்த மற்றும் சுபுன் போன்ற அதிகாரிகள் கலந்து கொண்டனர்
2.	ABU OnlineLegalSeminar	மலேசியா	சட்டம் தொடர்பான ஆசிய ஒளிபரப்பு சங்கத்தின் அங்கத்துவ நிறுவனத்திற்காக இடம்பெற்றது
3.	KOICA Concept papers	தென் கொரியா	தென் கொரியா சர்வதேச புரிந்துணர்வு சங்கத்தின் நிகழ்ச்சியாகும். திட்ட அறிக்கை முன்வைப்பதற்கு கூட்டுத்தாபன ஆளணியினர் தெளிவுபடுத்தப்பட்டனர்
4.	ABU Solidarity Content Database	மலேசியா	ஆசியா ஒளிபரப்புச் சங்கத்தின் அங்கத்துவ நாடுகளின் பங்கேற்புடன் நிகழ்ச்சிகளுக்கான தரவு முறைமை அமைத்தல்
5.	Yamagata international Documentary Contest	ஜப்பான்	கூட்டுத்தாபனத்தின் தயாரிப்பு கலைஞர்கள் தெளிவுபடுத்தப்பட்டனர்
6.	AIBD/Prix Jeunesse Foundation Regional Webinar on The Day 1 Became Strong in thePandemic	மலேசியா	கூட்டுத்தாபன அதிகாரிகள் தொடர்பு படுத்தப்பட்டனர்
7.	AIBD IT UNESCO-IPDCActivities on InvestigativeJournalism: 'GoingBeyond the Headlines- INVITATION	மலேசியா	செய்திப் பிரிவின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்
8.	AIBD/IOMRegional Webinarseries on Dispelling Disinformation about Migrants and Refugees	மலேசியா	நிறுவன அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

9.	Documentaries	ஜர்மன்	ஜர்மனின் DW சர்வதேச தொலைக்காட்சி அலைவரிசையினால் இலவசமாக பெற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கை நிகழ்ச்சி ஒளிபரப்பிற்காக அறிக்கை நிகழ்ச்சிப் பிரிவிற்கு வழங்கப்பட்டது.
10.	ABU CEOS TALKMOVING MEDIA LESSONS FOR FUTURE CHALLENGESAHEAD. (Webinar)	மலேசியா	தயாரிப்பாளர் பிரியந்த வெந்தமுல்ல கலந்து கொண்டார்
11.	ABU COVID-19 Content Database webinar)	மலேசியா	சிரேஷ்ட தயாரிப்பாளர் ஜயமினி இலேப்பெரும கலந்து கொண்டார்
12.	Social media content creation	AVN	உரிய அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.
13.	ABU Prizes 2021	மலேசியா	கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது
14.	Dox Leipzig	ஜர்மன்	கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது
15.	ABU Children's Drama Co Production 16th Series	மலேசியா	இம்முறை சிறுவர் பிரிவின் தயாரிப்பாளர் உதான குணதிலக்க பிரிதிநிதித்துவப் படுத்தினார்
16.	Global Media Forum	ஜர்மன்	உரிய அதிகாரிகளுக்கு அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது
17.	KOICA MastersScholarships	தென் கொரியா	தயாரிப்பாளர் தொன் தம்மிக இதற்காக பெயரிடப்பட்டார். அவர் தற்போது கொரியாவின் சியோல் நகரில் அரச நிருவாக தொடர்பான முதுமானிப்பட்டத்தினை தொடர்கிறார்.
18.	DW TV RebroadcastingAgreement	ஜர்மன்	ஜர்மனின் டொய்ச்வெல் நிறுவனத்தினால் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பரிமாற்றத்திற்காக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.
19.	Japan prize 2021	ஜப்பான்	முன் வைக்கப்பட்ட படைப்புக்களிடையே, நிகழ்ச்சி யோசனைப் பிரிவிற்கு முதல் தடவையாக கூட்டுத்தாபனத்தின் பெண் தயாரிப்பாளர் ஒருவரின் (வினோசா கிரிவந்தெனிய) யோசனை தெரிவு செய்யப்பட்டது.
20.	Anime Festival (Animation Film Festival)	ஜப்பான்	கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது

21.	SLRC CMG (CRI)Agreement	சீனா	உரிய ஒப்பந்தமான சீஆர்ஜ இற்காக அனுப்பி வைக்கப்பட்டது
22.	Why We cycle	நெதர்லாந்து தூதவராலயம்	நெதர்லாந்து தூதுவராலயத்தில் 05 இலட்சம் அநுசரனை நிதியினால் குறுகிய நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு அவை நெதர்லாந்தினால் தயாரிக்கப்பட்ட அரச நிகழ்ச்சிகளுடன் ஒளிபரப்பு செய்யப்பட்டது. சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிளம் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டது
23.	Tokyo Docs	ஜப்பான்	கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது
24.	DraftCooperation Agreement between Turkish and SLRC	இலங்கை மற்றும் துரிக்கி நாட்டுக்கும் இடையிலான	இந்த ஒப்பந்தங்களை அமைப்பதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
25.	AIBD/HBFSub-regionalWorkshop on Engaging Audience for TellingStories (Webinar)	மலேசியா	சிரேஷ்ட தயாரிப்பாளர் ஜயமினி கம்லத் தயாரிப்பாளர் எம். தசந்தமால், தயாரிப்பாளர் சிரான் ரத்நாயக்க, தயாரிப்பாளர் சமன் பிரேமரத்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.
26.	AIBD/UNESCO Specializationworkshops on Safety forJournalists Webinar)	மலேசியா	துயாரிப்பாளர் மல்கா ராஜபக்ச, தயாரிப்பாளர் பீ. நித்தியானந்தன், ருக்சான் கொடிதுவக்கு ஆகியோர் கலந்து கொண்டனர்.
27.	Agenda of the AIBDLeaders Web Summit.2-3June 2021 (Webinar)	மலேசியா	கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது
28.	2021 GoldPanda Awards China Call forEntries	ஜேர்மன்	கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது
29.	AIBD Online Workshopson Training of Trainers(Tot)	ஜப்பான்	கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது
30.	virtual AIBD-SLRCMeeting	மலேசியா	கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது
31.	Asia vision Annual Awards 2021		
32.	ABU Children Media Hub online workshop (Webinar)	மலேசியா	கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது

33.	ABU General Assembly and Meetings (Webinar)	நிகழ்நிலை செயலமர்வு	பணிப்பாளர் விஜய திசாநாயக்க பணிப்பாளர் கபில தசநாயக்க மற்றும் செய்தி பிரிவின் உதவிப் பணிப்பாளர் பிரசாத் தொடங்கொடகே ஆகியோரின் பெயர்கள் முன்வைக்கப்பட்டது. கலந்து கொண்டனர்.
34.	Digital BroadcastingNewest Trends: TV and Radio (Webinar)	மலேசியா	கபில தசநாயக்க கலந்து கொண்டார்
35.	AIBDRegional WorkshoponDocumentary Production-ConvincingAudience	மலேசியா	உதவிப் பணிப்பாளர் சந்தன செனவிரத்ன தயாரிப்பாளர் கயா ரம்யான அல்விஸ், தயாரிப்பாளர் பிரியந்த வெந்தமுல்ல கலந்து கொண்டனர்
36.	Workshops on Training of Trainers (Webinar)	மலேசியா	உதவிப் பணிப்பாளர் சந்தன செனவிரத்ன கலந்து கொண்டனர்
37.	Code of Conduct for Conflict SensitiveReporting for SouthAsia	மலேசியா	உதவிப் பணிப்பாளர் பிரசாந் தொடங்கொட கலந்து கொண்டனர்
38	UNV50 Country Awards (Media Sector)	இலங்கை	இந்தத் துறைக்காக ஆற்றிய சேவைக்காக ஐக்கிய நாடுகள் தன்னார்வ வதிவிட விருதினை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரெஜினோல்ட் குரே அவர்களுக்கு வழங்கப்பட்டது. திசாநாயக்க, நிசாதி பண்டாரநாயக்க மற்றும் லசந்த ருமேசன் போன்ற தயாரிப்பாளர் முன்வைத்த நிகழ்ச்சிகளுக்காக சான்றிதழ் மற்றும் பரிசுப் பணம் தலைவரின் அலுவலகத்தில் வழங்கப்பட்டது.
39.	AIBD EXBO of the 46th Annual gathering	மலேசியா	பணிப்பாளர் நாயகத்திற்காக பணிப்பாளர் கபில தசநாயக்க கலந்து கொண்டார்.
40.	ABUProgrammeCommittee Meeting	மலேசியா	பணிப்பாளர் விஜய திசாநாயக்க கலந்து கொண்டார்
41.	ABUTechnical Committee Meeting	மலேசியா	பணிப்பாளர் கபில தசநாயக்க கலந்து கொண்டார்
42.	ABU Awards Meeting	மலேசியா	ஆய்வு அதிகாரி புத்திகா கலந்து கொண்டார்
43.	Lankwi Documentary Festival	மலேசியா	ஆக்கங்கள் பல முன்வைக்கப்பட்டன.
44.	ABU General Assembly	மலேசியா	பணிப்பாளர் நாயகத்திற்கு பதிலாக பிரசாத் தொடங்கொட கலந்து கொண்டார்

45.	ABU SuperPanel Forum	மலேசியா	ஆய்வு அதிகாரி புத்திகா கலந்து கொண்டார்
46.	Keeping up to date with key market trends in afast evolving industry		கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது
47.	Organizingattending meeting with TurkishAgencyforacquiringMagnificent Century	இலங்கை மற்றும் துரிக்கி	பிரிவின் தலைவர் உற்பட திசாநாயக்க ஆய்வு அதிகாரி நெல்யா யசஸ்சிரி
48.	Australian Snort- Courses for year 2022	அவுஸ்திரேலியா	கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது

காப்பகம்

01 நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் அலகுகளுக்க உரியதான ஆவணக் கோப்புக்களை பொறுப்பேற்றல்.

02 அந்த ஆவணங்களை ஆவணப்படுத்தி கூட்டுத் தாபன காப்பகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டு பாதுகாத்தல்.

03 ஆவணங்கள் அகற்றுவது தொடர்பில் நாட்டில் நிலவுகின்ற சட்டதிட்டங்களின் கீழ் அகற்றுதல் பட்டியலை அமைத்தல்.

04 சட்டவியல் அல்லது நிர்வாக தேவைப்பாடுகளுக்குத் தேவையான ஆவணக் கோப்புக்களை மீண்டும் வழங்குதல்.

மேற்சொன்னவாறு நடவடிக்கை மேற்கொண்டு கூட்டுத்தாபனத்தின் காப்பகத்தை, 2021ஆம் ஆண்டினுள் கூட்டுத்தாபனத்தின் நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான பங்களிப்பினை தொடர்ச்சியாக வழங்குதல்

நிதிப் பிரிவு

வருமானம், கொடுப்பனவுகள், சம்பளங்கள், கணக்கீடு, பெறுகைகள் மற்றும் வரவு செலவுகளை நிர்வகித்தல், முதலான அலகுகளை கொண்டதாக நிதிப்பிரிவு அமைந்துள்ளது. நிதிப் பிரிவின் கீழ் விநியோகப் பிரிவும் செயற்படுகின்றது. நிதிப் பிரிவினால் எதிர்பார்க்கப்படும் முக்கிய பணி கூட்டுத்தாபனத்தின் நிதி முகாமைத்துவம் மற்றும் நிதி அறிக்கை தயாரித்தல் ஆகும்.

2021ஆம் ஆண்டில் நிதிப் பிரிவின் அனைத்து அலகுகளும் வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமானதும், பொருளாதார நன்மைகள் உச்ச வகையில் கூட்டுத் தாபனத்திற்கு கிடைக்கக் கூடிய வகையிலும் பொறுப்புடன் செயற்பட்டுள்ளது. இந்தப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற சகல நிதிக் கொடுக்கல் வாங்கல்களும் நேர்மையாகவும் ஒழுக்கமாகவும். இலக்கினைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. அனைத்து நிகழ்ச்சிகளினதும் ஆவணக் கோப்புக்கான சட்ட நடவடிக்கைகளுக்கு அமைவாக தயாரிப்பு மற்றும் விளம்பர செயற்பாடுகளுக்குத் தடை ஏற்படாத வகையில் கொடுப்பனவுகள் நேர்மையான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிகழ்ச்சிகள் நிறைவடைந்த பின்னரும் அந்த ஆவணக் கோப்புக்கள் தொடர்பான விடயங்களை பரிசீலனை செய்து வெளித்தரப்பினர்களுக்குரிய நேரத்தில் குறித்த கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன.

ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய ஊழிய நன்மைகளும் எந்த விதமான தாமதமுமின்றி வழங்கப்பட்டுள்ளதுடன், சம்பளத்தில் அறவிட்டு ஏனைய நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய யாப்பு ரீதியிலான கொடுப்பனவுகள் உரிய காலத்தில் அல்லது அதற்கு முன்னதாகவே செலுத்தப்பட்டுள்ளன.

பிரதான வருமான மூலமான ஒளிபரப்பு நேரத்தினை விற்பனை செய்வதும் ஏனைய வருமானங்கள் பொருத்தமான கணக்கீட்டுக் கோட்டுபாட்டிற்கும், தரத்திற்கும் ஏற்புடையவாறு அறிக்கை இடப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிகழச்சித் தயாரிப்பு, நெறிப்படுத்தல் மற்றும் ஒளிபரப்பு (பிரதான அலைவரிசையான ரூபவாஹினி ஐ அலைவரிசை/நேத்ரா) ஆகியவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற அனைத்துக் கொள்வனவுகளும் (மூலதன, மூலதனமல்லாத பொருட்கள் மற்றும் சேவைகள்) தொடர்பாக கருமமாற்றுவதற்கு நிதிப் பிரிவின் கீழுள்ள விநியோகப் பிரிவு 2020ஆம் ஆண்டு பொறுப்புடன் செயற்பட்டுள்ளது.

கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கும் தரக்கட்டுப்பாடுகளுக்கும் அமைவாக தயாரிக்கப்பட்ட சரியான நடப்பு நிதி மற்றும் முகாமைத்துவ அறிக்கையை ஏனைய பிரிவகளுக்கும் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபைக்கும் விவேகமான மற்றும் பதிலளிக்கக்கூடியவாறான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கைகள்

அவ்வப்போது சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகள் மற்றும் விசேட விடயங்கள் (ad-hoc) தொடர்பில் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளுடன் சேர்த்து தொகுக்கப்பட்டதாகும். சகல நிதித் தீர்மானங்களும் பல மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர். அவற்றின் இறுதிப் பெறுபேற்றின் பிரகாரம் சட்டரீதியிலான தீர்மானம் எடுக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தை ஏனைய அரச நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது கூட்டுத்தாபனம் நீண்டகால கடன்களைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பதுடன் குறுகிய கால கடன் மிகக் குறைவாக பெறப்பட்டுள்ளது. நிலவும் வர்த்தகம் மற்றும் பொருளாதார நிலைமைகளின் கீழ் நிதி முகாமைத்துவம் ஒரு சவால்மிக்க பணியாகும். இருப்பினும் கூட்டுத்தாபனத்தின் நிதிசார் நிலைபேறான தன்மையும் நிதி முகாமைத்துவமும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்ட மூலத்தின் படியும் 1982ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன சட்டத்தின் விதிகளுக்கு அமைவாக அனைத்து நிதியாண்டின் போதும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் (''இதற்குப் பின்னர் கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பிட்டுள்ளது.) செற்பாடுகள் தொடர்பான உண்மையான நீதியான நிலை வெளிக்காட்டப்படும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன பணிப்பாளர்களின் பொறுப்பாகும்.

கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றைத் தயாரிப்பதில் உரிய கணக்கீட்டுக் கொள்கைகளும் தரக் கட்டுப்பாடுகளும் தெரிவு செய்யப்பட்டு அவை ஒரே விதமாக வருடம்தோறும் பயன்படுத்தப்பட்டிருப்பதுடன் நீதியானதும் கூர்மையானதுமான தீர்வுகள் மற்றும் மதிப்பீடுகளும் இதற்காக வேண்டி பயன்படுத்தப்பட்டுள்ளமையை பணிப்பாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். அளவு ரீதியிலான ஒரு செல்வாக்கு நிதிக் கூற்றின் மீது ஏற்படுத்தும் ஏதாவது ஒரு கணக்கீட்டுக் கொள்கையின் அல்லது தர நிலைகளில் மீறல்கள் ஏற்பட்டிருப்பின் அவற்றை வெளிக்கொணர்ந்து அவை தொடர்பான விடயங்கள் தெளிவு படுத்தப்பட்டுள்ளன.

கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்கு போதுமான வளங்கள் கூட்டுத்தாபனத்திடம் காணப்படுகின்றதா என்பதை மதிப்பீடு செய்வதற்கும் கூட்டுத்தாபனத்தின் எதிர்கால நிதி மும்மொழிவுகள், நிதிப் பாய்ச்சல்கள் மற்றும் இன்றைய செயலடைவுகள் என்ற எண்ணக்கருக்களின் கீழ் பணிப்பாளர்களினால் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. தெடார்ச்சியாக பேணுதல் எனும் எண்ணக் கருக்களின் மீது பணிப்பாளர்களினால் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 1982ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் சட்டம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கும் அமைவாக கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமைகள் தொடர்பில் உண்மையானதும் நீதியானதுமான நிலையைக் காட்டும் வகையில் தேவையானவாறு கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டு அறிக்கை பேணப்பட்டுள்ளதை பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துவதன் ஊடாக பொறுப்பேற்றுள்ளனர்.

பணிப்பாளர்கள் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை பாதுகாப்பதற்கும் ஊழல் மோசடிகளை வெளிக் கொண்டுவருவதற்கும் மற்றும் அவற்றைத் தடுப்பதற்கும் பொருத்தமானவாறு உள்ளக நிருவாக முறைமைகளை தாபிப்பதற்கு நியாயமான முறையில் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தனது உச்ச அறிவின்படி கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட வேண்டிய சகல வரிகளும் கட்டணங்களும் ஊழியர்களுக்காக செலுத்தப்பட வேண்டிய அனைத்து கொடுப்பனவுகளும் அவர்கள் தொடர்பில் செலுத்த வேண்டிய சகல பங்களிப்புத் தொகைகளும் கட்டணங்களும் வரிகளும் ஐந்தொகையின் தினத்தன்று செலுத்த வேண்டியிருந்த ஓய்வூதியப்

பணிக்கொடைகள் உட்பட வேறு தெரிந்த அனைத்து கூட்டிணைக்கப்பட்ட பற்றுக்களையும் உரிய முறையில் செலுத்தியுள்ளமையை பணிப்பாளர் சபை உறுதி செய்கின்றது.

பணிப்பாளர் சபைக்காக

சொனால குணவர்தன
தலைவர்
இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்
2022.04.26

இலங்கைரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

2021.12.31ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான

நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	2021 ரூபா.	2020 ரூபா.
சொத்துக்கள்			
நடைமுறையல்லாச் சொத்துக்கள்			
சொத்துக்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணம்	8	562,106,475	466,272,860
புலமைச் சொத்து	9	123,067,523	134,632,066
தேவையான சந்தர்ப்பத்தில் விற்பனை செய்யத்தக்க நிதிசார் சொத்துக்கள் (முதலீடுகள்)		1,104,000	1,104,000
பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள்		54,325,425	52,309,095
சமூக நலன்புரி நிதியம்		497,517	487,717
காலம் பூர்த்தியடையும் வரை வைத்திருக்கும் நிதிச் சொத்துக்கள்	10	420,993,913	401,903,990
		1,162,094,854	**1,056,709,729**
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்பு	11	205,412,570	201,080,934
வியாபாரம் கிடைக்க வேண்டியவை	12	249,164,434	394,754,279
கடன் மற்றும் கிடைக்க வேண்டியவை	13	139,377,666	158,298,867
ஏனைய கிடைக்க வேண்டியவை	14	252,337,404	192,092,628
முற்பணக் கொடுப்பனவு		6.143,703	2,244,954
நிதி மற்றும் நிதிக்குச் சமனானவை	15	76,373,419	155,413,812
		928,809,196	1,103,885,475

மொத்த சொத்துக்கள்		**2,090,904,050**	**2,160,595,204**
உரிமையான்மையும் பொறுப்புக்களும்			
மூலதனமும், ஒதுக்கமும்			
அரசாங்க மூலதனப் பங்களிப்பு		735,742,424	537,742,424
திரண்ட இலாபம்		(571,576,904)	(347,178,946)
		164,165,521	190,563,478
நடைமுறையல்லாச் சொத்துக்கள்			
மூலதனப் பொருட்களுக்கான அரச கொடை	16	396,237,147	483,255,000
வெளிநாட்டுக் கொடை		57,780,417	85,953,772
செலுத்த வேண்டிய சமூக நலன்புரி நிதியம்		497,517	487,717
குறித்த பணிக்கொடைத் திட்டம்	17	205,383,678	226,221,975
நடைமுறையல்லாச் செலுத்த வேண்டிய வங்கிக் கடன் அளவு	22.2	83,720,930	139,534,884
		743,619,689	935,453,347
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வியாபார செலுத்த வேண்டியவை	18	106,751,247	110,926,268
வேறு நிதிப் பொறுப்புக்கள்	19	683,064,119	536,340,622
வேறு செலுத்த வேண்டியவை	20	46,853,453	18,019,491
நடைமுறை ரீதியாக செலுத்த வேண்டிய வங்கிக் கடன் அளவு	22.1	55,813,953	55,813,953
குறுங்கால வங்கிக் கடன் -ICC World Cup	22.3	-	54,750,000
வங்கி மேலதிகப் பற்று	21	290,636,068	258,728,044
		1,183,118,840	1,034,578,379
மொத்தப் பொறுப்புக்கள்		1,926,738,529	1,970,031,726
மொத்த உரிமையான்மையும் பொறுப்புக்களும்.		2,**090,904,050**	**2,160,595,204**

இந்த நிதிசார் அறிக்கைகள் தயார் செய்யப்பட்டிருப்பது இலங்கை கணக்கீட்டு நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 1971ஆம் ஆண்டு 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திற்கும் 1982 இலக்கம் 06 உடைய இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் சட்டத்திற்கும் இசைவாகவென்று பிரதான கணக்காளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

பீ. விஜயரத்ன	2022.04.26
பணிப்பாளர் நாயகம்	திகதி
ஏ.எச்.ஈ.ஆர்.பீ. எதிரிசிங்க	2022.04.26
பிரதான கணக்காளர்	திகதி

பணிப்பாளர் சபையானது, நிதிசார் அறிக்கைகளைத் தயார் செய்வது மற்றும்சமர்ப்பிப்பது பற்றிய பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த நிதி அறிக்கைகள் 2021ஏப்ரல் மாதம் 26ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் வெளியிடப்பட்டது.

சொனால குணவர்தன
தலைவர்
2022.04.06
திகதி

இலங்கைரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

2021.12.31ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான

விரிவான வருமானக் கூற்று

	குறிப்பு	2021 ரூபா.	2020 ரூபா.
(வருமானம்) விற்பனை வருமானம்	1	1,164,216,230	1,068,960,200
விற்பனைச் செலவினம்	3	(1,237,650,677)	(1,268,429,096)
மொத்த இலபாம்		**(73,434,448)**	**(199,468,897)**
வேறு செயற்பாட்டு வருமானம்	2	337,717,009	359,262,878
அரசின் பங்களிப்பு	2.1	164,000,000	310,000,000
விநியோகச் செலவினம்	4	(125,986,035)	(140,805,822)
நிருவாகச் செலவினம்	5	(492,014,722)	(511,015,755)
செயற்பாட்டு இலபாம்		**(189,718,195)**	**(182,027,596)**
நிதிசார் செலவு	6	(39,640,532)	(54,747,402)
வரிக்கு முன்னரான இலபாம்		(22,358,727)	(236,774,998)
வருமான வரி	7	2,016,330	2,474,904
இலாபம் (வருமான வரி குறைக்கப்பட்டதன் பின்னர்)		**(227,342,397)**	**(234,300,093)**
வேறு விரிவான வருமானங்கள்			
ஓய்வுப் பயன் திட்டத்திற்கு அமைய ஏற்பட்ட இலபாம் நட்டம்		-	-
காலப்பகுதிக்குரிய மொத்த விரிவான வருமானம்		**(227,342,397)**	**(234,300,093)**

இலங்கைரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

2021.12.31ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான

உரிமையான்மை மாற்றம் பற்றிய கூற்று

ரூபாக்களில்

	தடுத்து வைக்கப்பட்ட இலாபம்	**அரச பங்களிப்பு**	**மொத்த வருமானம்**
2020.01.01ஆந் திகதிக்கான மீதி	120,593,494	537,742,424	417,148,930
வரிப் பெறுமுதிக்கான பொருத்தங்கள்	7,753,181	-	7,753,181
முன்னைய வருடங்களுக்கான கிடைக்கப் பெற வேண்டிய வருமானப் பொருத்தமான சர்வதேச தொலைக்காட்சி நிறுவனத்தினால்.	(38,540)	-	(38,540)
கால வரையரைக்கு உரியதான மொத்த விரிவான வருமானம்	(234,300,093)	-	(234,300,093)
2020.12.31 ஆந் திகதிக்கு நிலுவை	**(347,178,946)**	**537,742,424**	**190,563,478**
2021.01.01 ஆந் திகதிக்கு நிலுவை	(347,178,946)	537,742,424	190,563,478
முன்னைய வருடங்களுக்கான வாடிக்கையாளர் பொருத்தங்கள்	(146,237)	-	(146,237)
முன்னைய வருடங்களுக்கான உணவக வாடகை வருமானத்திற்கான பொருத்தங்கள்	(5,000)	-	(5,000)
முன்னைய வருடங்களுக்கான பொருத்தங்கள் கல்வி நிகழ்ச்சி ஒளிபரப்பிற்காக கிடைக்க வேண்டிய வருமானத்திற்கான பொருத்தங்கள்	12,000,000	-	12,000,000
முன்னைய வருடங்களுக்கான நீக்கப்படுவதற்கான பொருத்தங்கள்	(8,904,324)	-	(8,904,324)
அரசின் பங்களிப்பு (மூலதனம்)	-	198,000,000	198,000,000
கால வரையரைக்குற்பட்டதான மொத்த விரிவான வருமானம்	(227,342,397)	-	(227,342,397)
2021.12.31ஆந் திகதிக்கு நிலுவை	(571,576,904)	735,742,424	164,165,521

இலங்கைரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

2021.12.31ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான

நிதிப் பாய்ச்சல் கூற்று

ரூபாக்களில்

	2021	**2020**
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பிறக்கின்ற நிதிப் பாய்ச்சல்		
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பிறக்கின்ற நிதிப் பாய்ச்சல்	319,523,758	182,596,327
வங்கி வட்டி	(22,571,459)	(29,257,239)
பணிக்கொடைக் கொடுப்பனவுகள்	(50,838,297)	(28,457,161)
புலமைச் சொத்துக்கள் கொள்வனவு- நாடகம்	(33,712,000)	(33,700,000)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகின்ற /பிரயோகிக்கின்ற தூய நிதி	**212,402,003**	**91,181,927**
முதலீட்டுச் செயற்பாடுகளினால் பிறக்கின்ற நிதி		
சொத்துக்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல்	(210,444,328)	(92,426,135)
சொத்துக்கள் பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் விற்பனை மூலமான வருமானம்	3,000	43,550
முதலீட்டு வருமானம் பெருகை (திறைசேரி உண்டியல் மற்றும் நிலையான வைப்பு)	30,506,734	39,221,013
மூலதனச் சொத்துக்களுக்கான அரச கெடைகள்	-	234,855,000
காலாவதியாகும்வரை வைத்திருந்த முதலீடுகளில் - நிலையான வைப்புக்களின் முதலீடு	(19,089,923)	(35,884,614)
இலங்கை வங்கி நிறுவனக் கிளையிடமிருந்து இலங்கை வங்கி டொரின்டன் கிளைக்கு நிதி மாற்றம் செய்தல்	-	64,147,754
இலங்கை வங்கி டொரின்டன் கிளையிலிருந்து இலங்கை வங்கி நிறுவனக் கிளைக்கு நிதி மாற்றம் செய்தல்	-	(5,784,147)

பணப் பரிமாற்றக் கட்டணம்	-	2,500
ஏலப் பத்திரங்களுக்கான உத்தரவாதக் கட்டணம்	-	1,003,520
பொதுத் திரைசேறிக்கு அனுப்பப்படும் சிறப்பு வரி விதிப்பு	-	1,915,328
காலாவதியாகும்வரை வைத்திருந்த முதலீடுகளில் - நிலையான வைப்புக்களின் முதலீடு	(35,884,614)	(8,632,600)
திரைசேறி பற்றுச் சீட்டுக்களின் முதிர்வு	1,671,715	1,573,096
திரைசேறி பற்றுச் சீட்டுக்கள் தள்ளுபடி		-
திரைசேறி பற்றுச் சீட்டுக்கள் மற்றும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்தல்	(844,952)	(65,353,630)
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து பிறக்கின்ற தேறிய நிதிப் புழக்கம்	**(198,197,752)**	**143,313,236**
நிதி நடவடிக்கைகளில் பிறக்கின்ற நிதிப் புழக்கம்		
வங்கிக் கடன் பெற்றுக் கொள்ளல்	-	200,000,000
குறுகிய கால கடன் பெற்றுக் கொள்ளல் -ICC World Cupபோட்டிகளுக்கான கொடுப்பனவு	-	73,000,000
குறுகிய கால கடன் - ICC World Cup போட்டிகளுக்கு தவனைக் கொடுப்பனவு	(54,750,,000)	(18,250,000)
வங்கி உத்தரவாதம்	-	(82,116,362)
வங்கிக் கடன் செலுத்துதல்	(70,402,668)	(33,136,975)
நிதி நடவடிக்கைகளில் பிறக்கின்ற நிதிப் புழக்கம்	**(125,152,668)**	**139,496,664**
வருடத்தினுள் நிதிக்குச் சமனானவைகளின் அதிகரிப்பு /குறைவு	(110,948,417)	373,991,827
வருட ஆரம்பத்தில் மீதி	(103,314,232)	(482,668,683)
வருட ஆரம்பத்தில் மீதி	**(214,262,649)**	**(108,676,857)**

செயற்பாட்டு நடவடிக்கைகளில் பிறக்கின்ற நிதிப் புழக்கம்		-
வரிக்கு முன்னரான தேறிய இலாபம் /நட்டம்	(229,358,726)	(236,774,998)
பொருத்தங்கள்		
